# செந்தமிழ்

தொகுதி 81 ஜூன் 1987 பகுதி - 2

மதுரைத் தமிழ்ச் சங்கம் * THE MADURA TAMIL SANGAM *

— உள்ளே —

நினைவாற்றலை வளர்ப்பது எப்படி?
முகம் பார்க்கும் கண்ணாடி
கன்னியாகுமரி
கடல் கடந்த கண்ணன்

மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை-1

ஆசிரியர்: என்.எஸ். முத்துமலைச்சாமி பி ஏ பி.எல்.

# செந்தமிழ்

தொகுதி - 81 ஜூன் 1987 பகுதி - 2

## உள்ளுரை

| எண் | பொருள் | பக்கம் |
| --- | --- | --- |
| | முன்னுரை | |
| 1) | நினைவாற்றலை வளர்ப்பது எப்படி? | ... 1 |
| 2) | வள்ளலாரின் மெய்ப் பொருளியல் கோட்பாடுகள் — டாக்டர் பி.ஆர். நரசிம்மன் | ... 6 |
| 3) | முகம் பார்க்கும் கண்ணாடி | ... 13 |
| 4) | கன்னியாகுமரி—கவிதை | ... 19 |
| 5) | கடல் கடந்த கண்ணன் பி. ஆர். ஸ்வாமி | ... 20 |
| 6) | நூல் மதிப்புரை | ... 26 |
| 7) | தமிழன் தந்த விஞ்ஞானம் — சு. சிவபார்வதி | ... 29 |
| 8) | பழமொழிகளில் பெண்டிர் — மீனாட்சி சுந்தரம் | ... 38 |
| 9) | பிஜித் தீவில் தமிழர்கள் | ... 43 |

பொறுப்பாசிரியர் : டாக்டர். பழநி. அரங்கசாமி

# நினைவாற்றலை வளர்ப்பது எப்படி?

ஏறத்தாழ நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னால் இந்திய நாடு முழுவதும் ஆங்கிலேயத்திலேயே பாடம் சொல்லிக் கொடுக்கத் தொடங்கி விட்டனர். பள்ளிக் கூடத்திலும், கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் ஆங்கில மொழியே அரியணை ஏறி விட்டது. அதுவரை பயிற்று மொழியாக இருந்த வடமொழியும் உருதுவும், பாரசீகமும், தமிழும், தெலுங்கும் அந்தந்தப் பகுதி-களில் பின்னுக்குத் தள்ளப்பட்டு விட்டன. இதற்கெல்லாம் ஒரு வகையில் முதற் காரணமாக இருந்தவர் டி.பி. மெக்காலே என்பவர். கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சி முடிந்து ஆங்கில ஏகாதி பத்தியமே இந்திய நாடு முழுமையிலும் ஆளுமைக்கு வந்தபிறகு மெக்காலே இங்கு வந்தவர். வியத்தகு நினைவாற்றல் படைத்தவர். பன்னிரெண்டு நூல்களின் ஒரு தொகுப்பாக இருப்பதும் மில்டன் என்னும் மாகவிஞனால் இயற்றப்பட்டதும் ஏறத்தாழ பன்னீராயிரம் வரிகள் கொண்டதுமான சுவர்க்க நீக்கம் எனும் மாகாவியத்தையும், ஜான்பனியன் எழுதிய பரதேசியின் பயணங்-கள் எனும் நூலையும் நினைத்தமாத்திரத்தில் முழுவதுமாக ஒப்பு விக்கக் கூடியவராக இருந்தார்.

இந்த அசாதாரணமான நினைவாற்றலை நமது நாட்டில் ஒரு கலையாகவே வளர்த்து வந்துள்ளனர். கற்றுணர்ந்த புலவர் பெரு மக்களே இக்கலையினைச் சிறப்புறக் கையாண்ட உண்மை சிலரது பெயர்களாலேயே விளங்குகிறது. சதாவதானம் சரவணப் பெருமாட் கவிராயர் இவருள் ஒருவர். சேதுபதியின் மீது விறலி விடு தூது பாடியவர். அவதானம் என்றால் செயல். ஒரே நேரத்தில் தம்மைச் சுற்றியும் தம்மீது நிகழ்த்தப்பெறும் பல்வேறு செயல்களையும் நினைவிலே கொண்டு கேட்போர் உளங்கொள விடையளிக்கும் திறன் படைத்தோரே அவதானிகள் எனப்பட்டனர்.

அண்மைக்காலம் வரை நெல்லை மாவட்டம் கோவில்பட்டி யில் வாழ்ந்த சதாவதானி இராமையா என்னும் பெரியவர் நினைவுக்கலை எனும் நூலை எழுதியவர். இவரது அவதானங்கள் அனைத்தும் திருக்குறளை ஒட்டியவை. எந்தக் குறளின் முதற் குறிப்பையோ, ஈற்றடியின் ஒரு பகுதியையோ கூறினால் பால், அதிகாரம், குறள் ஆகிய அனைத்தையும் இவர் மறுகணமே சொல்லி

விடுவார். குறளின் கருத்தைச் சொன்னாலும், குறள் வந்து விடும். ஒரு முழுக்குறளை கடைசி இரண்டு அடியாகக் கொண்டு முது மொழிமேல் வைப்பு' என்று கூறப்படும் வெண்பாக்களையும் இயற்றக்கூடியவராக இருந்தார். இவருக்கு எப்படி இந்த நினைவாற்றல் வந்தது? "மாயமோ, மந்திரமோ, தெய்வசக்தியே இதற்குக் காரணம் இல்லை. எனது நினைவாற்றலே இத்தகு வியத்தகு செயலுக்கு அடிப்படை" என்று நினைவுக்கலை எனும் தமது நூலுள் அவர் குறிப்பிடுகிறார். இளமையிலேயே கண்ணொளி இழந்த இப்பெருமகனார் ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கியவர் என்று கூறுதல் பொருத்தமே. சிறிய பையனாக இருந்த காலத்திருந்தே குறட்பாக்களை அடிமுதல் நுனி வரையிலும், நுனி முதல் அடி வரையிலும் மீண்டும் மீண்டும் பிறர் படிக்கக் செவி வழி உணர்ந்து நினைவாற்றலை வளர்த்துக் கொண்டிருக்கிறார்.

பொருள் புரிந்து, தேவையானால் பாடலை அன்வயப்படுத்தி அறிந்து, மீண்டும் மீண்டும் ரசித்துப் படித்துக் கொண்டே வந்தோமானால் எந்தப்பாடலும் நம்மதாகி விடும். இக்கருத்தை யான் எனது சொந்த அனுபவத்தின் அடிப்படையிலேயே கூறுகிறேன். மாயூரத்துக்கு அருகில் தருமபுர ஆதீன தமிழ்க் கல்லூரியில் வித்வான் வகுப்பில் பயின்று கொண்டிருந்த காலம். சேலம் மாவட்டத்தில் தமிழாசிரியராகப் பணியாற்றும் சிவகடாட்சம் எனும் நண்பர் எனது நினைவாற்றலைச் சோதிக்க விரும்பினார். தரங்கம்பாடி இரயில்வே லயனுக்கு அருகில் ஒரு தோப்பில் படித்துக்கொண்டிருந்தோம். சிலப்பதிக்காரத்தின் மதுரைக் காண்டத்தின் முதற் பகுதியாக நாடுகாண்காதையின் தொடக்கமாகிய 'திங்கண் மூன் றடுக்கிய' எனும் முதலடியினைச் சொல்லி விட்டு நூலை என்னிடமிருந்து பெற்றுக் கொண்டார். இருநூற்றுச் சொச்சம் வரியினையும் சொல்லி முடித்து அவரை வியப்பில் ஆழ்த்தினேன்.

இன்றை நாட்களிலும் கூட நினைவுக்கலை என்னைவிட்டு அகன்று விடவில்லை. இலக்கிய மேடைகளில் சொற்பொழிவாற்றும் போது என்னையொத்த பிற பேச்சாளர்களிடமிருந்து என்னைச் தனிமைப்படுத்தி உயர்வு பெறச் செய்யும் இந்த அரியக் கலையினை எப்படிப் போற்றாமல் இருப்பது? மிகச் சிறந்த பாடற் பகுதிகளை மீண்டும் மீண்டும் படிக்கும்போது அது தானாகவே

உள்ளத்தில் படிந்து விடுகிறது. விளக்கை அணைத்து விட்டுத் தூக்கம் வராமல் படுக்கையில் புரண்டு கொண்டிருக்கும் போதிலும் ரசித்துப் பயின்ற பாடற்பகுதிகளை மீண்டும் மீண்டும் சொல்லிப் பார்த்துக் கொள்வேன். கலிங்கத்துப்பரணியின் பற்பல தாழிசைகள், சுவையும் பொருளாழமும் மிகுந்த இராமாயணப்பாடல்கள், பட்டினத்தார், தாயுமானரின் தேர்ந்தெடுத்த விருத்தங்கள், ஒட்டக் கூத்தரின் மூவருலாப் பகுதிகள், வள்ளலார் கவிதைகள், பரஞ்சோதியின் திருவிளையாடற் பகுதிகள், மணிவாசகரின், திருமூலரின் தேர்ந்தெடுத்த பாடல்கள் ஆகியவை இவற்றுள் அடங்கும். மேடையில் சொற்பொழிவாற்றும் போது திடீர் திடீரென்று இந்த மேற்கோட்பகுதிகள் காற்றடிக்கும்போது அலைமோதுவதுபோல வந்து கைகொடுக்கும். எந்தக் குறிப்பும் கையில் வைத்துக் கொள்ளாமல் மடமடவென்று தகுதியான மேற்கோட்பகுதிகளை வீசியெறிந்து அனாயசமாகச் சொற்பொழிவு ஆற்றும்போது அவையோர் மெய்ம்மறந்து கேட்பதைக் காணுகின்ற ஆனந்தமான உணர்வை நான் பல்வேறிடங்களில் அனுபவித்திருக்கிறேன். இதற்கு ஆதாரமே நினைவுக்கலை தானே!

ஆழப்படிப்பு, அகலப்படிப்பு என்ற இரண்டு பிரிவுகளைக் கூறி அகலப்படிப்போர் நினைவாற்றல் பற்றி கவலைப்பட வேண்டுவதில்லை என்பர். நினைவுக் கலையினை வளர்க்கும் திறன் இல்லாதவரின் வெறும் பேச்சு இது. இலக்கியத்தினைப் பல்காறும் கேட்டுச் சுவைத்த அவையோரின் முன்னிலையில் பாரதியார், பாரதிதாசன், நாமக்கல் கவிஞர், கவிமணி போன்றோரின் பாடற் பகுதிகளை அப்படியே சொல்லி விடவேண்டுமேயொழிய அதனை முழுதுமாகச் சொல்ல வகையின்றி வெறும் விளக்கம் கொடுத்தால் சொற்பொழிவில் சுவையின்றிப் போய் விடும். சான்றாக புரட்சிக்கவிஞர் இலங்கையர்கோனாகிய இராவணனைப் பற்றி எழுதிய பகுதியினை முற்றுமாக அழுத்தம் திருத்தமாகச் சொல்வதை விடுத்து விளக்கம் கொடுப்பது பொருத்தமாகுமா? பேச்சாளர்கள் நினைவிற் கொள்ள வேண்டிய குறிப்பு இது.

அடுக்குத் தொடராகவும், சிற்சில சமயங்களில் கடுநடையாகவும் வரும் பாடல்களும் மனதில் தங்கி வ்டும். அவற்றை நெட்டுருப் போட்டுவிட வேண்டியதுதான். நற்றிணை நல்ல குறுந்

தொகை-முருகு பொருநாறு பாணிரண்டு-உந்திகளிறு உயிர் போதம் சித்தியார் என்று வரும் முதற்குறிப்புப் பாடல்களை நினைவிற் கொண்டால் இவ்வுண்மை தெளிவாகும்.

இலக்கியத்துறையில் மட்டும்தான் நினைவாற்றால் என்பதில்லை. ஒரு உளவியல் அறிஞருக்கு சிக்மண்ட் பிராய்டு எனும் உளநூலாரின் நூல்களில் ஒரு ஈடுபாடு உண்டு. கனவுகள் பற்றிய பிராய்டின் நூலை அந்த அறிஞர் ஆழ்ந்துபடித்திருக்கிறார். பிராய்டு பற்றி எண்ணியவுடன் அவரைப்பற்றிய செய்திகள் அனைத்தும் அவருக்குச் சரளமாக வந்து விடும். பிராய்டு ஒரு யூதர். இட்லர் யூதர்களை அடியோடு ஒழிக்க எண்ணினார். யூதர்களை அந்தக் காலத்து எகிப்திய பாரோ வமிசத்து மன்னர்களும் அழித்து விடத் திட்டமிட்டனர். இத்துணை இன்னலுக்கு இடையிலும் யூத வமிசம் இசுரேலைத் தலைநகராகக் கொண்டு ஆளுகின்றனர். இந்த யூத வமிசத்தைச் சார்ந்த பிராய்டு, கணித அறிஞர் ஐன்ஸ்டின் போன்றோர் உலகு முழுதும் அறிமுகமானவர்கள். இப்படி ஒரு புகழ் பெற்ற மனிதர், நிகழ்ச்சி ஆகியவை பற்றிய தொடர்பான செய்திகளை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டுமானால், எத்தகு பொருள்களில் நமக்கு ஈடுபாடு உள்ளதோ அவற்றையே மீண்டும் மீண்டும் ஆழமாகவும், அகலமாகவும் படித்துக் கொள்ள வேண்டும்.

பல்வேறு துறைகளைச் சார்ந்த நூல்களைப் படிப்போருக்கு ஒரு இன்றியமையாத செய்தி. கணிதமும், பௌதிகமும் தொடர்புடையன இவற்றை ஒன்றன்பின் ஒன்றாகப் படிக்கலாம். கணிதம் படித்துவிட்டு வரலாற்றினைப் படிப்பது பொருத்தம் ஆகாது. இந்திய நாட்டு வரலாற்றைப் படித்து விட்டு நேருவின் வாழ்க்கை வரலாற்றைப் படிக்கலாம். நினைவாற்றலை வளர்ப்பதற்கு உளவியலார் கூறும் உபாயங்களில் இதுவும் ஒன்று.

தகுதிக்கும் சக்திக்கும் ஏற்ற அளவு மூளைக்கு வேலை கொடுத்துக்கொண்டே இருக்க வேண்டும். நீண்ட நாள் பணி புரியாமல் முடங்கிக்கிடக்கும் இரும்பு துருப்பிடித்துப் போவதைப் போல, இயக்கம் இன்றியிருக்கும் மூளையும் பயன்படாது. தொலைபேசி எண்களை ஏதோ சில குறியீடுகளையோ அடையாளங்களையோ வைத்துக் கொண்டு மனதில் இறுத்திவிட வேண்டும்.

வாய்ப்பு நேரும் போதெல்லாம் அந்தப் பல்வேறு எண்களையும் நினைவுபடுத்திப் பார்த்துக் கொள்ள வேண்டும். எழுத எழுதத்தான் கையெழுத்து சிறப்பாக அமையும். தொடர்ந்து படித்து வந்தால் உச்சரிப்பு நன்றாக வரும். அதுபோன்றுதான் இன்றியமையாத செய்திகள் மனதில் இருத்தும்போது நினைவு ஆற்றலும் வளர்ந்து கொண்டே வரும். ஆறுவயது முதற்கொண்டே கணிதங்களைப் போட்டுக் கொண்டு வரும் கணிதமேதை சகுந்தலா இடைவிடாத பயிற்சியும் உழைப்புமே தன்னை உலகம்போற்றும் இந்த அளவிற்கு உயர்த்தியுள்ளன என்று கூறுகிறார்.

பழைய செய்திகளை நினைவிற்கொண்டு வருதற்கோ புதியனவற்றைப் பயிலுதற்கோ பொருத்தமான நேரம் அதிகாலை தான். ஓடியாடிவிட்டு வந்தோ, கோப தாபங்களை மனதிற் கொண்டோ எதனையும் படிக்கத் தொடங்குவது பயனற்ற செயல். இரவில் மிதமாக உணவு உண்டு படுத்து உறங்கிவிட வேண்டும். முன்இரவில் படிப்பது சிறப்பாக அமையாது. உடலும் உள்ளமும் எந்தப் பதட்டமும் இல்லாது அமைமயாக இருக்கும்போது பயில்வதே உள்ளத்தில் பதியும். அதிகாலை நேரமே அதற்குப் பொருத்தம். மாவீரன் நெப்போலியனும், இங்கிலாந்தின் பிரதமராக இருந்த வின்ஸ்டன் சர்ச்சிலும் தங்களது இன்றியமையாத அன்றாடப் பணிகளை காலை 3-மணியளவில்தான் தொடங்குவர் என்று கூறப்படுகிறது.

நினைவினை வளர்ப்பதற்கு மருத்துவ, உடற்கூற்று முறையில்ஒரிரு செய்திகள். இரவில் படுத்து உறங்கும்போது கையது கொண்டு மெய்யது போர்த்தித் தூங்கக் கூடாது. கால்களை நீட்டி நன்றாக மூச்சு வாங்கிச் சாவதானமாக உறங்க வேண்டும். தனக்கு வேண்டிய சக்தியினை ஈட்டிக் கொள்ளுதற்கு மூளைக்கு வேண்டுவது பிராணவாயு. இதனை மூளைக்குக் கொண்டு வருவது இரத்தம். இரவு பகல் எந்நேரமும் உடல் முழுதும் ஓடிக் கொண்டிருக்க இரத்தம் தங்கு தடையின்றி மூளைப் பகுதிக்குச் செல்ல வேண்டும். இதனை உறுதிப்படுத்துவதற்குத் தான் முடக்கம் இன்றி நன்றாகச் சுவாசிக்கின்ற முறையில் படுத்து உறங்க வேண்டும்.

குளுகோஸ், உயிர்ச்சத்துக்களில் ஒன்றான புரோட்டீன் ஆகிய இரண்டும் மூளை வளர்ச்சிக்குத் தேவையானவை. வாதாம் பருப்பு, கடலை, பயறு வகைகளை போதுமான அளவு அன்றாட உணவில் சேர்த்துக் கொள்வது நல்லது.

— பழநி. அரங்கசாமி

## வள்ளலாரின் மெய்ப்பொருளியல் கோட்பாடுகள்

— டாக்டர் பி. ஆர். நரசிம்மன்,
பேராசிரியர்,

வள்ளலார் "யான் அடையும் சுகத்தினை நீர் தாம் அடைதல் குறித்தே எடுத்துரைத்த" தத்துவமே சமரச் சுத்த சன்மார்க்கம் ஆகும். தான் கண்ட தத்துவத்திற்கு செயலுருவம் கொடுக்கவே அவர் 1865-ஆம் ஆண்டில் சமரச வேத சன்மார்க்க சங்கத்தை அமைத்தார். பின்னர் அதன் பெயரைச் சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம் என்று மாற்றினார். சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம் என்ற பெயரிலேயே அவருடைய தத்துவம் முழுவதும் அடங்கியுள்ளது.

சங்கம் என்னும் சொல்லின் மூலம் மனித இனத்தைப் பிரித்து வைக்கும் சாதி, சமய, மொழித் தடைகளை எல்லாம் தகர்த்தெறிந்து மக்கள் அனைவரையும் ஒரு பெரிய மனுக்குலக் குடும்பமாக உருவாக்க வள்ளலார் விரும்பியதை அறியலாம். எனவே சங்கம் என்பது எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிர் போல் எண்ணி, உள்ளே ஒத்து, உரிமை உடையவராய் வாழ்கின்ற மக்களைக் குறிக்கும்.

சமரசம் என்ற சொல் வழக்கத்தில் உள்ள சமய முறைமைகளுடன் ஒரு புதிய முறைமையை சேர்ப்பதாகாது. சமரசம் என்பது அனைத்துச் சமயங்களின், மெய்ப்பொருளியல்களின் அடிப்படைக் கோட்பாடுகளை ஒருங்கிணைப்பதாகும். சமரசம் அனைத்துச் சமயங்களையும், மெய்ப்பொருள்களையும் ஒன்றாகக் கருதுவதுடன் அவற்றைக் கடந்தும் நிற்பதாகும்.[1] சமரசம் என்ற இக் கருத்து திருமூலர், மாணிக்கவாசகர், தாயுமானவர் போன்றவர்கள் போற்றி வளர்த்த கருத்தெனினும், வள்ளலாரின் சமரசக் கொள்கை முன்னவர்களில் இருந்து மாறுபட்டது எனலாம். எவ்வாறெனில் வள்ளலாருக்கு முன்பிருந்த அறிஞர்கள் தாங்கள் சார்ந்திருந்த, சமய, மெய்ப்பொருள் அடிப்படைகளின் வழிநின்று உண்மையை விளக்க, வள்ளலார் அனைத்துச் சமய, மெய்ப்-

பொருளியல்களைக் கடந்துநின்று உண்மைகளை விளக்குகின்றார். எனவே தான் இவரது சமரசம் தூய்மையானது. அனைத்தும் கடந்ததும் ஆகின்றது.

**சன்மார்க்கம்** என்ற சொல்லை வள்ளலார் பின்வருமாறு விளக்குகின்றார். "சமரச வேத சன்மார்க்க சங்கம் என்பதற்குப் பொருள் எல்லாச் சமயங்களுக்கும் பொதுவாகிய அறிவுநூல் முடிவான நான்காவது மார்க்கத்தை அனுஷ்டிக்கின்ற கூட்டமென்று கொள்க மேற்படி மார்க்கம் நான்காவன: தாச மார்க்கம். சற்புத்திர மார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என நான்கு" என்றும் "ஷடாந்த சமரச சுத்த சிவ சன்மார்க்கம் என்பதில் ஷடாந்தம் என்பது வேதாந்தம், சித்தாந்தம், போதாந்தம், நாதாந்தம், யோகாந்தம், கலாந்தம் ஆக ஆறு என்றும், "பூர்வத்தில் நின்ற சமயமத சன்மார்க்கங்களை மறுப்பது சுத்த சன்மார்க்கம்"[8] என்றும் கூறுகின்றார்.

**இறைக்கோட்பாடு :** வள்ளலாருக்கு இளமையில் வழிபடு கடவுளாக சேவற் கொடியோன் முருகனும், வழிபடுகுருவாக அருட்செல்வர் திருஞான சம்பந்தரும், வழிபடு நூலாக வான்கலந்த மாணிக்க வாசகரின் திருவாசகமும் அமைந்திருந்தன. பின்னர் அவர் சிவபக்தராகவும், அதன்பின் நடராஜர் அன்பராகவும் இறுதியில் அருட்பெருஞ்சோதி அடியவராகவும் விளக்கினார். அந்நிலையில் வள்ளலார் சிறு தெய்வ வழிபாடுகளையும் உயிர்பலியிடுதலையும், கலையுரைத்த கற்பனைகளையும், கண்மூடிப் பழக்கவழக்கங்களையும் மறுத்து, உருவமற்று அனைத்திலும் ஊடுருவியும், கடந்தும் நிற்கின்ற எல்லாம் வல்ல சக்தியை இறைவனென்று கூறுகின்றார். உருவாகியும், அருவாகியும், உருவருவாகியும் இருக்கின்ற இறைவனை ஒளிவடிவாகக் சுருதிய வள்ளலார் அதனை, அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருனை என்கிறார்.

வள்ளலாரின் இறைக்கோட்பாட்டில் "சத்" என்ற சொல் ஒரு சிறப்பான இடத்தைப் பெறுகின்றது. அவர் தனது தத்துவத்தை சன்மார்க்கம் என்று குறிப்பது உண்மையைத்தேடும் ஒரு நெறியாகவே கொள்வதைக் குறிக்கும், இறைவனைச் சோதியாக,

ஒளியாகக் காண்பது, அது அனைத்திற்கும் அடிப்படையாக அமைந்திருப்பதாலேயே ஆகும். வள்ளலார் தனது அருட்பெருஞ்சோதி அகவலில் மிகவும் விரிவாக இறைவனை ஒளியாக விளக்குகின்றார்.

வள்ளலார் தமது இறைக்கோட்பாட்டிற்கு இணங்க சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞானசபை என்னும் தனிப்பெருங்கோவிலை நிறுவினார். இக்கோவில் அமைந்துள்ள சிற்சபையும், பொற்சபையும் சிதம்பரத்தில் முன்னரே உள்ளதாகும். இதில் உள்ள எண்கோணவடிவான ஞான சபை வள்ளலார் புதிதாகக் கண்டதாகும். அதன் பன்னிரு கால் மண்டபம் நாற்கால் மண்டபத்தையும், நாற்கால் மண்டபம் அருட்பெருஞ்சோதி ஆண்டவரையும் கொண்டதாக அமைந்திருப்பதானது, பன்னிருகால் மண்டபம் உடலையும், நாற்கால் மண்டபம் அகத்தையும் அருட்பெருஞ்சோதி ஆண்டவர் அகத்தில் உறையும் இறை ஒளியையும் குறிப்பால் உணர்த்துவன எனக் கூறலாம்.[3]

அருட்பெருஞ்சோதி ஆண்டவரின் மிக உயர்ந்த தன்மையாக தனிப்பெரும் கருணையை வளளலார் குறிப்பிடுகின்றார். இறைவன் பேரருளாளன் என்றும், அவனுடைய அருளை சக்தி என உருவகப்படுத்தும் சைவ மரபிற்கு இணங்க தனிப் பெருங்கருணையை இறைவியென்று குறிப்பிடலாம்.

**உயிர்க்கோட்பாடு :** வள்ளலார் உயிர்கள் அனைத்தும் எல்லாம் வல்ல இறைவனால் படைக்கப்பட்டவை என்றும், உரிமையுள்ள சகோதரர்கள் என்றும் குறிப்பிடுகின்றார். உயிர்களுக்குப் முன்பின் பிறவி தேகம் உண்டென்றும், முன் பிறப்பின் வினைகளை ஒட்டியே இப்பிறப்பிம் அதன் துன்பமும் ஏற்படுகின்றது என்றும் கூறுகின்றார். உயிர்கள் சடமாகிய உடலில் விளங்கும்பொழுது சீவர்களாகின்றனர். அனைத்துச் சீவர்களும் சகோதரர்களானதால் அவைகளிடம் கருணை காட்ட வேண்டுவது சீவர்களின் கடமையாகும். சீவர்கள் இவ்வுலகில் பசி, தாகம், பிணி, இச்சை, எளிமை, பயம், கொலை ஆகிய துன்பங்களை அனுபவிக்கின்றன. அவற்றுள் முதன்மையான துன்பம் பசியேயாகும். பசியைப் போக்குதலே உயிர்க் கருணை அல்லது சீவகாருண்யம் எனப்படுகிறது.

வள்ளலாரின் சீவகாருணிய ஒழுக்கம் என்ற நூலின் முதல் வாக்கியமே உலகத்தில் மனிதப் பிறப்பைப் பெற்றுக் கொண்டவர்கள் இந்தப் பிறப்பினால் அடையத்தக்க ஆன்மலாபமாகிய உறுதிப் பொருளைக் காலமுள்ளபோதே அறிந்து அடைய வேண்டும் என்று அறிவிக்கின்றது. இம்மனித வாழ்வின் சிறப்பினை மறந்து மனித வாழ்வில் உறுதியாக நடைபெறக்கூடியதான இறப்பைப் பற்றிச் சிந்தியாது பொருள் தேடுவதிலேயே காலத்தைக் கழிப்பது மடமையாகும். நாம் யார்? ஏன் இங்கு வந்தடைந்தோம்? இதன் முடிவில் எங்கு செல்வோம் என்பதையும் மறந்து திரிகின்றனர். சீவர்களின் வாழ்க்கைக் குறிக்கோளாகிய ஆன்ம லாபத்தைப் பின்வருமாறு வள்ளலார் விளக்குகின்றார். 'இயற்கை வடிவினராகிய கடவுளின் பூரண இயற்கை இன்பத்தைப் பெற்று, எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எவ்வளவும் தடைபடாமல் வாழ்கின்ற ஒப்பற்ற பெரிய வாழ்வே இந்த மனிதப் பிறப்பினால் அடையத்தக்க ஆன்மலாபம் என்று உண்மையாக அறிய வேண்டும்' இதனைக் கடவுளின் இயற்கை விளக்கமாகிய அருளைக் கொண்டே அடைய வேண்டும் என்றும், அவ்வருளைச் சீவகாருணிய ஒழுக்கத்தினால் மட்டுமே பெறமுடியும் என்றும் வள்ளலார் கூறுகின்றார்.

**அறக்கோட்பாடு அல்லது ஒழுக்கநெறி ;**

வள்ளலாரின் அறஇயல் சமுகஇயலின் அடிப்படையைக் கொண்டது. அவர் நித்திய ஒழுக்கம் உலகியல் என்ற தலைப்பில் மூவகை ஒழுக்க நெறிகளைக் குறிப்பிடுகின்றார். அவைகள் 1) சாதாரண நித்திய கர்ம விதி, 2) பொது விதி 3) சிறப்பு விதி என்பனவாகும். இவற்றுள் முதலாவது உடலோம்புதலைப் பற்றியது; இரண்டாவது வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய பொதுவான நெறிகள் ஆகும். மூன்றாவது சன்மார்க்க நெறியாகிய ஒழுக்கக் கோட்பாடுகள் ஆகும். சன்மார்க்க நெறி இந்திரிய ஒழுக்கம், கரண ஒழுக்கம், சீவ ஒழுக்கம், ஆன்ம ஒழுக்கம் ஆகியவைகளைக் கொண்டதாகும்.

இந்திரிய ஒழுக்கம் கன்மேந்திரிய ஒழுக்கம், ஞானேந்திரிய ஒழுக்கம் என இருவகைப்படும். ஞானேந்திரிய ஒழுக்கமாவது இறைவனின் புகழைக் கேட்டல், செவிகளில் தீயசொற்கள் நுழை-

வதைத் தடுத்தல், தீயனவற்றையும், கொடியனவற்றையும் காணுதலைத் தவிர்த்தல், தீயவைகளுடன் தொடர்பற்றிருத்தல், பேருண்டி முதலியவற்றிலிருந்து நீங்குதல் ஆகியவற்றைக் குறிக்கும். கர்மேந்திரிய ஒழுக்கமாவது இனியவற்றைப் பேசுவது, பொய் பேசாதிருத்தல், உயிருக்கு தீங்கு செய்யாதிருத்தல், சமய வழிப்பட்ட வாழ்க்கையை மேற்கொள்ளுதல், தூய பண்பினருடன் இணைந்திருத்தல் ஆகியவற்றைக் குறிப்பிடும்[4].

உள்ளம் பின்பற்ற வேண்டிய கரண ஒழுக்கம் மனத்தை சிற்சபையில் நிறுத்துதல், நல்லனவற்றையே சிந்தித்தல், பிறர் குறைகருதாதிருத்தல், 'இயற்கையின் தன்மையை ஒட்டி மனத்தைச் சீராக வைத்தல் ஆகியவற்றைக் குறிப்பிடும்[5].

சீவ ஒழுக்கம் என்பது "ஆண் மனிதர் பெண் மனிதர் முதலிய யாவர்களிடத்திலும், ஜாதி, சமயம். மதம், ஆசிரமம், சூத்திரம், கோத்திரம், குலம், சாஸ்திர சம்பந்தம், தேச மார்க்கம், உயர்ந்தோர், தாழ்ந்தோரென்றும் பேதம் நீங்கி, எல்லாருந் தம்மவர்களாய் சமத்திற்கொள்வதாகும்"[6].

ஆன்ம ஒழுக்கம் என்பது யானை முதல் எறும்பு ஈறாக உள்ள எல்லா வகை சீவர்களிடத்தும் இரக்கம் கொள்வதைக் குறிக்கின்றது. எல்லா உயிர்களிடமும் இரக்கம் காட்டி, ஆன்மாவைச் சபையாகவும் அதனுள் விளக்கம் பெறுகின்ற ஒளியைப் பதியாகவும் கண்டு முழுமையாக நிற்க வேண்டும். இந்நிலையில் ஆன்மா அருட்பெருஞ்சோதியில் கலக்கின்றது.

**வழிபாடு:**

வள்ளலார் அமைத்த திருக்கோயிலான சத்திய ஞான சபையின் உயிர் மூச்சாக விளங்குவது சோதி வழிபாடு ஆகும். இவ்வழிபாடு திருவிளக்கையும் அதன் முன்னர் அமைக்கப்படும் திருநிலைக் கண்ணாடியையும் இதன் முன்புறம் அமைக்கப்பட்டுள்ள கருப்பு, நீலம், பச்சை, சிவப்பு, பொன்மை, வெண்மை, கலப்பு வண்ணத்திரைகளையும் கொண்டு, இத்திரைகளை ஒவ்வொன்றாக விலக்கி அருள்சோதி ஆண்டவரை வணங்குவதைக் கொண்டதாகும். சோதியாகிய இறைவனை மறைத்து நிற்கும் தத்துவங்களே ஏழு திரைகள் எனப்படுகின்றன. இவை ஒவ்வொன்-

றும் ஒவ்வொரு சக்தியை குறிக்கும் என்கின்றார் ஊரன் அடிகள். "கருப்புத்திரை - மாயா சக்தி, நீலத்திரை - கிரியா சக்தி; பச்சைத்திரை - பராசக்தி; சிவப்புத் திரை - இச்சா சக்தி, பொன்மைத்திரை - ஞானசக்தி, வெண்மைத்திரை - ஆதிசக்தி; கலப்புத்திரை-சிற்சக்தி".[8]

உ. மா. துரைசாமிப்பிள்ளை என்பவர் கீழ்க்கண்டவாறு விளக்கம் தருகின்றார்.

1) கருப்புத்திரை - மாமாயை - அரைசதுமறைக்கும்.
2) நீலத்திரை - மாயாசக்தி - ஆருயிர் மறைக்கும்
3) பச்சைத்திரை - கிரியாசக்தி - பரமவெளியதனை மறைக்கும்
4) சிவப்புத்திரை - பராசக்தி - சித்துருவெளியை மறைக்கும்
5) பொன்மைத்திரை - இச்சாசக்தி - பொருளுரு வெளியை கறைக்கும்
6) கலப்புத்திரை - ஆதிசக்தி - கருதலனுபவங்களை மறைக்கும்".[9]

இறைவனை அறிவதிலிருந்தும் உயிரைத் தடுப்பது அதனுடைய தன் முனைப்பாகிய ஆணவம் என்பதனால், அதன் தன்மைகளான மோகம், மதம், இராகம், விசதம், தாபம், சோகம், வைச்சித்திரியம் ஆகியவற்றை இவ்வேழுதிரைகள் குறிப்பதாகவும், அவற்றை ஒவ்வொன்றாக விலக்குவது ஆணவத்தின் ஏழு தன்மைகளையும் விலக்கி உயிர் இறைவனை அடைவதாகவும் குறிப்டலாம்.

வள்ளலார் அமைத்த திருக்கோயிலின் முன் வழிபடுவோர் ஞான சபைக்கு வெளியே நின்று "பசித்திரு, தனித்திரு, விழித்திரு" என்னும் வழிபாட்டு மந்திரச் சொற்களையும், அவரது சுத்த சன்மார்க்க சத்திய சிறு விண்ணபத்தின் இறுதியில் கொடுக்கப்பட்ட சன்மார்க்க விண்ணப்பங்களையும் சொல்லி வழிபட வேண்டும் என்று வழிபாட்டு முறையை விளக்குகின்றார். பிற கோவில்களைப் போன்று இசைக்கருவிகள் முழங்க, படைமல்களுடனும், தீப, தூப ஆராதனைகளுடனும் வழிபாடு நடத்தப்படுவதில்லை.

அடிக்குறிப்புகள் :

1) Dr. M. Shanmugam - Philosophy of Saint Ramalingam, p-26.
2) திருஅருட்பா — உபதேசப்பகுதி.
3) ஊரன்அடிகள் — இராமலிங்க அடிகள் வரலாறு, ப. 452.
4) Dr. M Shanmugam — Philosophy of Saint Ramalingam, p-37.
5) Ibid., pp 37-38.
6) திருஅருட்பா — உபதேசப்பகுதி.
7) முன்னது.
8) ஊரன்அடிகள் — வடலூர் வரலாறு, ப. 64-65.
9) உ. மா. துரைசாமிப்பிள்ளை — சிதம்பரம் இராமலிங்க சுவாமிகளின் சரித்திரமும் அருட்பா ஆராய்ச்சியும், ப-17.

---

## ஆங்கிலத்தில் நளவெண்பா

பாளையங்கோட்டையில் விழி இழந்தோர் பள்ளி நீண்ட காலமாக இயங்கி வருகின்றது. 1950-ஆம் ஆண்டு இப்பள்ளியின் முதல்வராக இருந்தவர் எம். சி. லாங்டன் என்னும் ஆங்கிலேயர். லண்டனில் பிறந்து வளர்ந்து, கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் பயின்று லீட்ஸ் கல்லூரியில் கிரேக்க மொழியினைப் பயிற்றுவித்தவர். பின்னர் ஆன்மீகக் கல்வியும் பயின்று 1937-இல் திருமணம் புரிந்து கொண்ட பின்னர் ஏசு சபையினரால் திருநெல்வேலிப் பகுதிக்கு கிறித்தவ மதத் தொண்டு செய்ய அனுப்பப்பட்டார். இவரே புகழேந்திப் புலவரால் இயற்றப்பட்ட நளவெண்பாவினை முற்றும் பயின்று மிகவும் சுருங்கிய அளவில் ஆங்கில நான்கு வரிப் பாடல்களாகவே இயற்றியுள்ளார். நூலின் ஒவ்வொரு காண்டத்திலும் உள்ள கடவுள் வாழ்த்துப்பகுதிகளை நீக்கி விட்டார். ஏராளமான புராணச் செய்திகள் மலிந்த அவற்றை மொழி பெயர்க்க இயலவில்லை என்கிறார். கதைப் பகுதிகளை மட்டும் அழகுறப் பெயர்த்துள்ளார்.

—ஆசிரியர்

## முகம் பார்க்கும் கண்ணாடி

அழகிய பெண்ணொருத்தி தன்னை
அலங்கரித்து மீளவில்லை;
அவளுக்கும் ஆடிக்கும் இடையில்
அந்த முகத்திரையன்றோ முரண்டு செய்கிறது!
— உருதுக்கவிஞர் காலிப்

யாரோ ஒருத்தியின் ஒப்பனைக் கலையைப் பற்றி இப்பாடலில் கவிஞர் புகழ்ந்து பேசுகிறார். அது வேறு சங்கதி. ஆயினும் மரச்சட்டம் போடப்பட்டுள்ள கண்ணாடியை மனிதன் எப்போதும் விரும்பிப் பார்க்கிறான் அவனது முகம் பார்க்கும் கண்ணாடியைத்தான் கண்ணாடி என்று நாம் சில சமயங்களில் தவறாக எண்ணி விடுகிறோம். உண்மை அது அன்று பளபளப்பான சுவர்களில் கூடத் தனது உருவம் பிரதிபலிப்பதை மனிதன் பார்க்க முடியும். கண்களை அகலவிரித்து ஆழ்ந்து நோக்கினால் வெட்ட வெளியிலே கூட அவன் தன்னைக்கண்டு கொள்ள முடியும் ஆனால் சும்மா இருந்து கொண்டே கண்களை மூடிக் கொள்ளும் சோம்பேறியாக ஒருவன் இருந்தால் அவனது குறைகளைப் பிறர் கண்டுகொள்வர்.

கண்ணாடி பற்றிய மகிழ்ச்சியான செய்தி என்னவென்றால், அது எல்லோரையும் திருப்தி செய்துவிடும். தனது முகம் அழகாக இல்லையென்று உண்மையாகவே ஒருவன் எண்ணிவிட்டால், அவன் நிச்சயமாகக் கண்ணாடியைப் பார்க்கவே மாட்டான். ஆனால் அப்படியொரு இக்கட்டான நிலைமை யாருக்கும் எழுவது இல்லை ஏனென்றால் கண்ணாடி யாருடைய மனத்தையும் புண்படுத்துவதில்லை.

மற்றவர்கட்கு அத்தகைய கண்ணாடியாக விளங்குகின்றவர்களும் இந்த உலகத்தில் நிறைய இருக்கின்றார்கள் அன்றாடம் காலையில் தொழிலகத்துக்குச் செல்கிறார் ஒரு மேலாளர். திறமையோடு பணி செய்யாதவரைப் பெரிதும் கடிந்துரைக்கிறார். அவரை எதிர்த்து எவராலும் ஒரு வார்த்தைகூடப் பேசமுடியவில்லை. அவர் செய்வது சரியில்லை என்றும் சொல்ல முடியவில்லை. மேலாளரின் மதிப்பீடு எனும் கண்ணாடிக்கு முன்னால் தொழிலாளரின் முழு உருவம் சரிவரத் தெரியவில்லை. மனிதனைக்

குட்டையாகவும், கூனனாகவும், கோணல் மாணலாகவும் காட்டு-கின்ற கண்ணாடிகளையும் கூட நீங்கள் பார்த்திருக்கக் கூடும் அத்தகைய கண்ணாடியில் தன்னைப் பாரப்பதற்கு ஒருவன் மிகப்பெரிதும் அஞ்சுகிறான். மேலாளரைப பார்க்கும்போது பணி-யாளருக்கு ஏற்படும் உணர்வும் இதுவே தான். கண்ணாடிக்கு நயவஞ்சனை கிடையாது. யாருக்காகவும் பாரபட்சமாக அது நடந்து கொள்ளுவதில்லை. அதனால் தான் ஒரு கவிஞன் சொல்லுகிறான்,

துணிச்சலான கவிஞன் மன்னனையோ துதி பாடல் இல்லை
அலெக்சாந்தரின் குறையினையும் ஆடியோ மறைப்பதில்லை

குறிப்பிட்ட நேரமோ இடமோ தனக்குப் பொருத்தமாக இருக்கிறதா என்பது பற்றிக் கண்ணாடி கவலைப்படுவதில்லை. மேலாளரும் அப்படித்தான் நடந்து கொள்கிறார். அண்மைக் காலத்துக்குச் சற்று முன்னர் தனியொரு மனிதன் தன் இளமைக் காலத்தில் மிக்க அழகுடன் இருந்தான். பளிங்கு போன்ற அவனது முகத்தைக் காண்பதற்குக் கண்ணாடியே கூச்சப்பட்டது. ஆனால் இப்போதோ கண்ணாடியிடமிருந்து அவன் ஒதுங்கி விட விரும்புகிறான். ஏனெனில் அவனது முதுமையினையும், நெற்றியின் சுருக்கங்களையும் கண்ணாடி துல்லியமாகக்காட்டிவிடுகிறது. தனது பணியாளருக்கு முன்னால் மேலாளரும் இப்படிப்பட்ட ஒரு கண்ணாடியாகத்தான் இருக்கிறார் தனக்கென்று ஒரு அளவு-கோல் வைத்துக்கொண்டு இந்த உலகத்தையே அவர் அளக்-கிறார். அவரது மனக் கண்ணாடி எப்போதும் ஒரே நிலையில் இருப்பதில்லை. உள்ளுக்குள்ளேயே அது மாறுகிறது. தன்னுள் பல கண்ணாடிகளை அது அடக்கி வைத்துள்ளது. குறிப்பிட்ட நேரத்தில், முன்னோ பின்னோ எத்தகைய கண்ணாடி செயற்-படுகிறது என்று யாராலும் உய்த்துணர முடியாது.

இயல்பாகவே இக்கண்ணாடி மிகவும் வேடிக்கையானது. அது இதயத்தைப் போலவே செயல்படுகிறது தன்னைப்பார்ப் போரின் பாவனைகளையும் கோணங்களையும் அப்படியே காட்டு கிறது. அது சுத்தமாகவும் ஒழுங்காகவும் இருக்கவே விரும்பு-கிறது. ஆயினும் அதன் மீது தூசி படிந்து விட்டாலோ, பார்க்கும் பொருளனைத்தும் மங்கலாகி விடுகிறது. அதன் மீது படிந்துள்ள தூசு அகற்றப்பட்டாலொழிய வேறு பொருள்களை விட ஒளி

பொருந்திய சூரியன் கூட அதனுள் மங்கித் தான் தெரிகிறது. அதனால்தான், கண்ணாடி ஒளிவுமறைவின்றி உள்ளதையே பிரதிபலிக்கும் என்று உறுதியாகச் சொல்ல முடியவில்லை. சில சமயங்களில், அதனுள் பரவியிருக்கும் தூசியும், வளைவும் காணும் பொருள்களைத் தெளிவின்றியும், கோணல் மாணலாகவும் வெளிப்படுத்துகின்றன.

கண்ணாடிபோலும் தெளிந்த நீரில் ஒரு மரத்தின் உருவத்தைப் பார்த்தால், நிமிர்ந்து நின்று கொண்டிருக்கும் அந்த மரம் வளைந்து காணப்படுகிறது. அதுமட்டுமல்ல. தலைகீழாகி விடுகிறது. உண்மையாகவே அந்தமரம் வளைசலாகவும் இல்லை; குறைபட்டதும் இல்லை. இது எதைக் காட்டுகிறது? பழுதுபட்ட சில கண்ணாடிகளும் கூட ஒவ்வொரு கட்டத்திலும் மனிதனைக் குழப்பி விடும்.

வசதிபடைத்த சில பெரும்புள்ளிகளும் கண்ணாடி போலத் தான் இருக்கின்றனர். சாதாரண ஏழை மனிதன் தனது வாழ்நாள் பூராவும் மிக்க ஆவலுடன் இந்தக் கண்ணாடியினையே தான் பார்த்துக் கொண்டிருக்கிறான். அந்தக்கண்ணாடிக்கோ, நெளிவு-சுளிவுகள், விருப்பு வெறுப்புகள் அனைத்தும் உண்டு. எளிமையான இந்த ஏழையோ அங்கிருந்து தெம்பும் தெளிவும் கிடைக்குமென்று தனது கண்களைத் தேய்த்துவிட்டுப் பார்க்கிறான். ஆனால் இப்படிச் செய்தும், அந்தக் கண்ணாடியின் சுருக்கம் மறைய வில்லை. தனது முகத்தை சோப்பினால் கழுவித்துடைத்தாலும் அந்தக்கண்ணாடியின் மாசும் மறுவும் எப்படி நீங்கும்? அதனுடைய அழுக்கு மேலோட்டாகப் படிந்திருந்தாலாவது, அதனைக் கழுவித் துடைத்திடலாம். அதனுள்ளிருக்கும் அழுக்கு மனத்தின்கண் படிந்ததாயிற்றே! எவ்வளவுதான் புறத்தூய்மையினைச் செய்தாலும், உரிக்க உரிக்க வந்து கொண்டிருக்கும் வெங்காயத் தோலைப் போல உள்ளிருக்கும் அவனது அழுக்கு வெளிப்பட்டுக் கொண்டே இருக்கிறதே! வெங்காயத்தோலை உரிக்க உரிக்கக் கண்ணுக்குத் தான் எரிச்சல்! இவனது உள்மனக் கண்ணாடியின் உளைச்சல் வெளிவரும் போதெல்லாம் நமது உள்ளத்துக்கு அல்லவா வேதனை! ஆதலால் இந்தத் தொல்லையிலிருந்து ஒருவன் தன்னை காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்றால், அந்தக் கண்ணாடியினையே வெறுத்து ஒதுக்குவதைத் தவிர வேறு வழியில்லை.

இந்தக்காலத்தை அறியாமையே ஆள்கிறது. விரும்பியவற்றைச் சாதிக்கிறது. மனம் போன போக்கில் நடந்து கொள்கிறது. அறிவினை அது வெருட்டிவிரட்டுகிறது. முரட்டு மனிதன் மிகவும் எளிய மனிதனைப் பாவம் என்று விட்டுவிடுவான் என்பது அந்தக்காலம். இப்போதெல்லாம் முரடன் போட்ட உத்தரவுகளை இந்த ஏழை வாக்காலும் அப்படியே நிறைவேற்றுவதைத் தவிர வேறுவழியில்லை.

அறிவு நேர்மையானது, தனக்கென்று ஒரு சிறந்த பாதையினை வகுத்துக் கொள்ளுகிறது. மாணவன் ஒருவன் அறிவோடும் துணிச்சலோடும் இருந்தால் என்றாவது ஒருநாள் விரும்பிய இடத்தை அடைந்து விடுவான். ஆனால் அதற்கு நேர்மாறான அறியாமையோ சந்துபொந்துகள் நிறைந்தது நேரிய வழிகளை அது பின்பற்றுவதேயில்லை. அதன் வழி கோணல் மாணலாக இருப்பதனால், அது தோன்றி மறையும் தன்மையானது போகிற வழியில் அறிவுப்பாட்டையினையும் அது சந்திக்கிறது. அந்தச் சந்திப்பினால் நேர்மையானதையும் அறிவாளிகளையும் தொந்தரவு செய்கிறது. இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால் அறிஞரில் வறியோர் ஆக இருப்போர் கூட அறிவிலியின் அதி வேகமான உயர்வினை வியப்போடும் ஏக்கத்தோடும் பார்க்கின்றனர். அதாவது அறியாமையெனும் கண்ணாடியில் தங்களது தலைவிதியின் கோலத்தைப் பார்க்கின்றனர். படிப்பறிவும் எளிமையும் எந்தப் பயனையும் தரவில்லையே என்று ஏங்குகின்றனர். ஆயினும் பல்வேறு நூல்களைப் படிக்கும்போதும், புதிய பணிகளைத் துவக்கும் போதும் புதிய நம்பிக்கையினைப் பெறுகிறார்கள். இருந்தாலும் அறியாமை உயர்ந்து கொண்டே போவதைக் கண்டு விட்டாலோ, தாம் எவ்வளவோ தூரம் பின்னடைந்து கிடப்பதையும், தேவைகளுக்காகப் போராடவேண்டி இருப்பதையும் எண்ணி அச்சம் கலந்த வியப்பு அடைகிறார்கள். தங்களுக்கு கிடைக்கும் சிற்சில வாய்ப்புகளையும் ஒத்துக் கொள்ள விரும்புவதில்லை. தமது எண்ணற்ற தேவைகளை உணர்ந்தாலும், அதனைப் பூர்த்தி செய்யும் வாய்ப்புகளைப் பல அறிவிலிகள் அபகரித்துக் கொள்வதைக் கண்டு மன வருத்தம் அடைகின்றனர். கல்வியறிவு இருந்தும், நற்குணங்களைப் பெற்றிருந்தும், அந்த அறிவிலிகளின் போக்குக்கே இவர்களும் போக நேரிடுகிறது. ஆனால் பட்டறிவினையும், படிப்பறிவினையும் அவ்வளவு சுலபமாக அவர்களால் துறக்க முடிய-

வில்லை. ஏனெனில் மிகவும் ஆழமாக இவர்களது உள்ளத்தில் அவை பதிந்துள்ளனவே! இத்தாலிய விஞ்ஞானி கலிலியோ போல உயிரே போனாலும் உண்மையைத் தவிர வேறொன்றையும் அவர்களால் பேச முடியவில்லையே! ஆரத்-தழுவும் கரடியிடம் அகப்பட்டுக்கொண்ட மனிதனின் கதைபோல ஆகிவிடுகிறதே!

தனியொரு மனிதனின் உண்மையான கண்ணாடி அவ-னுடைய மனச்சான்று தான். தாலாட்டுப்பாடி நீ அதனைச்சற்றே தூங்க வைத்து விடலாம். ஆயினும் இப்போதோ நாளையோ விழித்தேயாக வேண்டும். சில சமயங்களில் இதுவும் கூட பேந்தப் பேந்த விழிக்கிறது. இப்படித் திணறுகின்ற நேரங்களில், மனிதன் தனது கண்களை மூடிக்கொண்டு பெரிய முரட்டுக் கம்பளியால் தன்னையும் மூடிக் கொண்டாலும், அவனது மனச்சான்று மட்டும் அவனைத் துளைத்துக் கொண்டேயிருக்கும். அவனது உள்மனக் கண்ணாடியில் வெவ்வேறு வண்ணங்களில் அவன் தன்னைப் பார்த்தேயாக வேண்டும். சில சமயங்களில் தனது கைகளினால் தனது முகத்தை அவன் மூடிக்கொள்கிறான். தலையைச் சுவற்றின் மீது மோதுகிறான். ஆயினும் உலகமெனும் வெளிக் கண்ணாடி அவனது உள்ளத்தை மாற்றி அவனது கவனத்தைத் திருப்பி விடுகிறது.

அன்றொருநாள் நடந்த நிகழ்ச்சி எனக்கு நன்றாக நினை-வில் இருக்கிறது. எனது அறையில் நுழைந்ததும், நான் கண்ட புகைப்படம் என்னைக் குழப்பத்தில் ஆழ்த்தி விட்டது. என்னுடைய அறைக்குள் அது எவ்வாறு வந்தது என்றே எனக்குப் புரிய-வில்லை. என்மீது எப்போதும் பகைமை கொண்டிருந்தவனின் புகைப்படம் அது. காலையும் மாலையும் என்னை நச்சரித்தவன் அவன். என்னைக் காட்டிக் கொடுத்து என்னைத் தொல்லைப் படுத்தியவன். அதனைப் பார்த்ததும் எனக்கு வந்த கோபத்துக்கு அளவேயில்லை. பொங்கி வந்த கோபத்தை அடக்க முடியாமல் ஆத்திரத்துடன் எனது வேலைக்காரனை நோக்கிக் கத்தினேன். 'யார் அந்த போட்டோவை உள்ளே வைத்தது'- என்று இருபுறமும் பார்த்து விட்டு 'எந்த போட்டோவைச் சொல்லுகிறீர்கள். இங்கு எதுவும் இல்லையே' என்றான் அவன். 'ஏன் அங்கே பார்க்கிறாய்!

அதோ மேஜையைப் பார்' - என்று மறுபடியும் உரத்த குரலில் பேசினன். அவன் சற்றுத் தணிந்த குரலில் பதில் சொன்னான். 'அது போட்டோ இல்லை. வெறும் முகம் பார்க்கும் கண்ணாடி, ஸார்! நான் செய்த தவறு விளங்கியதும், அவனை நிமிர்ந்து பார்க்கும் தைரியம் எனக்கு வரவில்லை. கண்ணாடியினையும் பார்க்க மனமின்றி அதனை மேஜையின் மீதே கவிழ்த்து வைத்து விட்டேன். எனது நண்பன் எழுதியிருந்த பாடலை முணு முணுத்தன என் உதடுகள்.

> யாராயினும் முகத்தை நோக்கி ஆடியைக் காட்டினால்
> நீ யென்ன செய்வாய்?
> தற்கொலைக்குக் கூட உன்னைத் தள்ளிவிட்டால்
> நீ என்ன செய்வாய்?
>
> — பேராசிரியர் ஸமான் ஆசூர்தா

---

## ஒப்பிலக்கியம் பற்றிய சில செய்திகள்

ஒப்பிலக்கியப் படிப்பு முதன்முதலில் கல்கத்தாவில் ஜாதவ்-பூர் பல்கலைக்கழகத்தில் துவக்கப்பட்டது. இலக்கியங்களை ஒப்பிட்டுப் பார்த்து ஒற்றுமை, வேற்றுமைகளைக் காணும் முயற்சி ஒரு வகையில் இலக்கிய இன்பம் பயக்கும் செயலாகும். ஒரு மொழியினைச்சார்ந்த இலக்கிய நூலோடு பிறமொழியின் நூல் ஒன்றை எந்த அளவில் ஒப்பிடுவது? கட்டமைப்பு, நடை, கருத்து நோக்கம் என்ற அடிப்படையில் ஒப்பிடுவதே மரபு.

நமதுநாட்டில் அண்மைக்காலமாக ஒப்பிலக்கியப்படிப்பு முக்கியத்துவம் பெற்று வருகிறது. ஒப்பியல் இலக்கியம் என்ற சொல்லை 1848 - ஆம் ஆண்டு மாத்யூ ஆர்னால்டு என்னும் திற-னாய்வாளரே ஆங்கிலத்தில் முதன் முதலில் பயன்படுத்தினார். இருப்பினும், அதனுடைய நோக்கம், வழிமுறைகள், விளக்கம் ஆகியனவற்றைக் குறித்து ஒப்பியல் அறிஞருக்கிடையே வேறுபாடு-கள் உள்ளன. காலப்போக்கில் வேறுபாடுகள் மறைந்து ஒப்பிலக்-கியம் பரவலாகப் பயிலப்படும் என்பதில் ஐயமில்லை.

# கன்னியாகுமரி

தனித் தொதுங்கி வாழுமித் தென்புறத்துக் கன்னி
இருமணமே புரிந்த ஏந்திழையே யாயினும்
தன்னையே பறி கொடுத்த தையலே யாயினும்
அனைத்து மகளிராயும் தனித்தனியே வாழ்கின்றாள்!

காலம் அழிந்தாலும் தானழியாக் கன்னி
பருவம் குலையாத பத்தினிக் குமரியாய்
சாகாத சரித்திரத்தில் நிலைபெற்றுக் கிடக்கின்றாள்!
ஆருயிர் அழகனுக்காய் அருந்தவமே புரிகின்றாள்!

வழிமயங்கித் தடுமாறும் மரக்கலங்கள் உய்வுபெற
ஒளிவீசும் நாசியினில் உயர்கமலம் தானணிந்து
செந்தீயாக் கனன்றுவரு செக்சர் வானத்துக்கெதிர்
சித்திரச் சிலையாக நிற்கின்ற குமரியில்
தன்னையே லயிக்கின்றார் இந்நாட்டுத் தையலர்கள்!

இருவானுக் கப்பால் முக்கடலும் தாண்டியதாம்
பருவம் குலையாத குமரியின் பார்வை!
அவளது கோபமே அலையின் கடுமை!
அவளே தான் இக் கன்னியா குமரி!

— ஆங்கிலத்தில் : காவேரி,
தமிழில் : திரையன்,

தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் படைப்பாற்றல் மிக்க திருமதி லக்ஷ்மி கண்ணன் 'காவேரி' என்னும் புனைபெயரில் சிறு கதைகளும் புதினங்களும் எழுதியுள்ளார். ஸால் பெல்லோ எனும் ஆங்கில நாவலாசிரியர் பற்றி ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற்றுறுள்ளார். ஆங்கிலத்தில் மூன்று கவிதைத் தொகுப்பும், இரண்டு தமிழ் நாவல்களின் ஆங்கிலப் பெயர்ப்பும் அவரது பிற இலக்கியப் படைப்புகள். தாம்ஸன் நிறுவனத்தில் உயர்நிலை அலுவலர். டில்லி மாநகரின் விரல் விட்டு எண்ணக் கூடிய சிறந்த எழுத்தாளர்களில் இவரும் ஒருவர்.

# கடல் கடந்த கண்ணன்

பி. ஆர். ஸ்வாமி

பக்தி வேதாந்தரின் கீதைபற்றிய சொற்பொழிவுகள் ஒவ்வொரு திங்கள், புதன், வெள்ளிக் கிழமைகளில் மாலையில் நடைபெறும் என்னும் அறிவிப்பும் வெளியில் ஒட்டப்பட்டது. குருகுலக்கல்வி கற்போரைப் போன்று சொற்பொழிவுக்கு வந்த பத்துப் பனிரெண்டு இளைஞர்கள் வெறுந்தரையில் பாய்களில் அமர்ந்து கொண்டனர். சுவாமிகளும் அனைவரையும் பார்த்தாற்போல் சம்மணம் போட்டு உட்கார்ந்தார். பொன்னிறமேனி. மழுங்கச் சிரைத்த தலையோடு மோன நிலையில் அமர்ந்திருக்கும் புத்தர் போலக் காட்சியளித்தார் பிரபுபாதர். அவரது கையில் பித்தளையால் செய்யப்பட்ட தாளங்கள் இருந்தன. தாளத்தை ஒலித்துக் கொண்டே, பாடத் தொடங்கினார்.

ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, கிருஷ்ண கிருஷ்ண
ஹரே ஹரே
ஹரே ராம ஹரே ராம, ராம, ராம, ஹரே ஹரே

மெல்லிய குரலில் பாடி முடித்து விட்டு எதிரில் அமர்ந்திருந்தோரைப் பாடுமாறு பணித்தார். முன்னமேயே இதில் பயிற்சி பெற்றோர் சிலரும் இருந்ததனால் கிருஷ்ண கானம் அறை முழுதும் கணீரென ஒலித்தது. போதைப் பொடியும், மயக்க ஊசியும் மருந்துமாய்க் காலத்தைக் கழித்தோரின் கண்டங்களின் வழியாகக் கண்ணபிரான் ஒலியுருவமாய் உட்புகுந்து இசையுருவாக வெளிவந்தான். ஹரே கிருஷ்ண மந்திரம் அறை முழுதும் கலகலப்பையுண்டுபண்ணியது. கீர்த்தனையாகப் புறப்பட்ட கிருஷ்ண கான வெள்ளம் இனம் புரியாத ஒரு புது உலகத்துக்குத் தங்களைக் கொண்டு செல்வது போல் உணர்ந்தார்கள். இந்த இசைமயக்கத்தினால் யாருக்கும் தீங்கு இல்லை. அப்பழக்கற்ற நாத வெள்ளம் கூடியிருந்தோரின் நாடி நரம்புகளில் எல்லாம் ஒலித்தது. அந்த வெள்ளத்தில் ஆட்பட்ட இளைஞர் கூட்டத்தை சுவாமிகள் ஆழ்ந்து நோக்கினார். லௌகீகத்தில் சுழன்று தவிக்கும் அமெரிக்க மானுடத்தை இந்த ரீதியிலேயே கரையேற்றிவிடலாம் என்னும் நம்பிக்கை ஒளிபிறந்து விட்டது. கீழ்வானம் கறுத்து புறஉலகினை இருள் சூழ்ந்து விட்ட அந்த நேரத்தில் உள்மனத்தில் ஒரு ஒளி வெள்ளம்,

பக்கத்திலேயே குடியிருப்போருக்குச் சற்று எரிச்சல்தான்! என் செய்வது? டப்பாங்குத்துப் பாடலோ, காட்டுக் கூச்சலான நீக்ரோ இசையாகவோ இருந்தால் அமைதி குலைகிறது என்று எதிர்க்கலாம். ஆனால் காவியுடை தரித்த இந்தியச் சாமியார் ஹிப்பி இளைஞரைக் கூட்டி அதுவும் பகவத் பாராயணம் செய்வதை எப்படித் தடுப்பது! அன்றாடம் பாடலின் வேகம் வலுக்கின்ற நேரத்தில் எல்லாம் சுவாமிகள் தலையினை ஆட்டி ரசித்துக் கொண்டே ஜல் ஜல் என்னும் தாள ஒலியினையும் யந்திரகதியில் சுழலவிடுவார். தெருவில் செல்லும் கார்களின் ஹார்ன் ஒலியும் இந்த நாத வெள்ளத்தில் அமிழ்ந்து விடும். குருவும் சீடர்களும் உள்ளத்தால் இணைந்து இசையினால் ஒன்றுபட்டுத் தம்மை மறந்து வெளிப்படுத்திய மோன நிலையில், புற உலகின் எந்த விதமான சப்தமும் அவர்களை நெருங்க முடியவில்லை. இப்படியே அரைமணி நேரம் கழிந்தது. சுவாமிகள் கீர்த்தனையை நிறுத்தினார். வேத ஒலியும் நாத ஒலியும் நின்று புற உலகின் சப்தங்கள் காதில் விழத் தொடங்கின. அதனையெல்லாம் கவனிக்காத சுவாமிகள் கான வெள்ளத்தில் மயங்கிக் கிடந்த சீடர்களின் மயக்கம் தீருதற்குள் சொற்பொழிவைத் துவக்கினார்.

சுவாமிகளது சொற்பொழிவு எளிமையானது தான். யாருக்கும் விளங்கக் கூடியது தான் ஆயினும் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்றிருந்த ஹிப்பிகளுக்கு அந்தச் சொற்சொழிவும் கூட புரியாத புதிராக இருந்தது. எனவே சிலர் பாடல் முடிந்ததும் மெள்ள எழுந்து வெளியில் வந்து காலணியைப் போட்டுக்கொண்டு வெளியேறி விட்டனர். விரல் விட்டு எண்ணக் கூடிய வெகு சிலரே அறையில் இருந்தனர். தத்துவார்த்தச் சொற்பொழிவு சற்று கனமானது அல்லவா? இன்றுங்கூட வளைவு நெளிவுகள் இல்லாத வெறும் ஆன்மீகப் பிரச்சாரத்துக்குக் கூட்டம் வருவதில்லையே! அரசியல் வாடை, கதைச் செருகல், கற்பனைக்காதல், லௌகீக வர்ணனை, காலட்சேபப்பணி ஆகிய இவை எல்லாவற்றையும் கலந்தால்தானே கூட்டம் அலைமோதுகிறது ஆன்மீகச் சரக்கும் விலை போகிறது. எனவே அமெரிக்க நாட்டில், முற்றிலும் புதிய சூழலில் கீதைப் பிரசங்கத்துக்கு ஒரு சிலரே உட்கார்ந்திருந்ததில் வியப்பில்லை. அமர்ந்திருந்த சிலரும் விளக்கத்தைப் புரிந்துக் கொள்ளவில்லையாயினும் பகவத் கீதையினைப் புரட்டியாவது பார்த்தவர்கள், புரிகின்ற வரையில் கேட்போம் என்று அமர்ந்திருக்கின்றவர்கள்.

எல்லோருக்கும் இடைஞ்சலாக ஒலியும், புகை நெடியும் பக்கத்துப் போர்ஷனில் குழந்தைகளின் ஓட்டமும், எதிர்புறத்தில் வீட்டு நாயின் குரைப்பும் மீண்டும் கேட்க தொடங்கி விட்டன. திறந்திருந்த கதவை மூட முயன்றார் ஒரு தொண்டர். சுவாமிகளோ அதனைத்தடுத்து விட்டார். எந்த நேரத்திலும் யார் வேண்டுமானாலும் வரலாம் என்பது அவரது விருப்பம். அவர் நினைத்ததும் நடந்து விட்டது, அறுபது வயதிருக்கும். தாடியும் மீசையுமாய்க் கசங்கிய சட்டையை அணிந்து கொண்டு உட்புகுந்தான் ஒருவன். மதுவில் அமிழ்ந்து கிடந்து எழுந்து வந்திருக்கிறான். சுவாமிகள் அவனையமர்த்தி விட்டுப் பேசி கொண்டேயிருந்தார். நேராகப் பின்புறம் சென்று கழிவறையில் புகுந்து கொண்டான். பிறகு வெளி வந்து எல்லோரையும் பார்த்துக் தன் போக்கில் பேசிக்கொண்டேயிருந்தான். தானாகவே தள்ளாடிக் கொண்டு வெளியில் போய் விட்டான்.

எந்தவிதப் பதட்டமும் இல்லாமல், ஆத்திரம் கொள்ளாமல் அச்சம் இல்லாமல் சுவாமிகள் பேசிக் கொண்டேயிருந்தது கூடியிருந்தோர்க்கு வியப்பாக இருந்தது. ஞானிகளின் போக்கே இது தான் போலும்! செஞ்சாந்து எறியினும், செத்தினும் போழினும் நெஞ்சு ஒர்ந்து ஓடாத நடுநிலை அவர்களுக்கே உரியது தான்! இந்த எண்ணம் தோன்றியதும், சுவாமிகளைப் பற்றிய சீடர்களின் மதிப்பு உயர்ந்து விட்டது. அவர் வழிசெல்ல வேண்டும் என்னும் லயிப்பு ஏற்பட்டு விட்டது. உபன்னியாசத்தின் முடிவில் மீண்டும் வழக்கமான கிருஷ்ண பஜனை. இறுதியில் சிறிய தட்டு ஒன்றில் சிவந்த ஆப்பிள் ஒன்றும் கத்தியும் சுவாமிகளிடம் ஒரு சீடர் கொடுக்கிறார். சுவாமிகள் அதனைச் சிறுசிறு துண்டுகளாக வெட்டித் தான் ஒன்றை வாயில் போட்டு அமைதியாக மெல்லுகிறார். மீதத் துண்டுகளைத் தாங்கிய தட்டு அவையோரிடம் வருகிறது. ஆப்பிள் துண்டங்களை மென்று சுவைத்துக் கொண்டேயிருக்கும்போது சுவாமிகள் எழுந்து வணங்கி விட்டு வெளியேறுகிறார்.

அகில உலகக் கிருஷ்ணாய இயக்கம் இப்படித்தான் தோன்றியது. பத்துப் பன்னிரண்டு பேருடன் பாகவத முழக்கத்துடன் தொடங்கிய இந்த இயக்கம் உலகின் பல பாகங்களிலும் ஊடுருவி வளரும் என்று யாரும் கனவுகூடக் காணவில்லை. பத்தி வேதாந்த

ச்வாமிகள் இந்த இயக்கத்துக்கு ஒரு தலைப்பெழுத்துச் சொல்லையும் உருவாக்கினார். அதுவே (Iskcon) இஸ்கான் என்பது. தொடங்கப்பட்ட ஆண்டு 1966. அந்த இயக்கத்தின் கொள்கைகள் ஏழு. சப்த ஸ்வரங்களை உள்ளடக்கியதே இசை. எனவே இசையினை முன்னே வைத்துத் துவக்கப்பட்ட இக்கிருஷ்ணாய இயக்கத்தின் தலையாய கொள்கைகளும் ஏழாக இருந்தது பொருத்தம் தான். இந்த இயக்கத்தைத் தொடங்கியபோது உலக இறையுணர்வு இயக்கம் என்று பெயரிடலாம் என்பது சிலரது யோசனை. பிரபுபாதருக்கு அது பொருத்தமாகத் தோன்றவில்லை. ஏனென்றால் பிரபுபாதரைப் பொருத்தவரையில் கண்ணன் என்றாலே இறைவன்தான். "யாதொரு தெய்வம் கொண்டீர்; அத்தெய்வமாகி ஆங்கே" எம் கண்ணனே வருவன் என்பதே அவருணர்ந்த இறைமைக் கொள்கை. எனவே அகில உலகக் கிருஷ்ணாய இயக்கம் என்னும் பெயரே நிலைத்தது. இன்றைக்கு இருபது ஆண்டுகளுக்கு முன்னர் அயலகத்து அமெரிக்க மண்ணில் ஒரு இந்தியத் துறவியால் தொடங்கப்பட்ட கிருஷ்ணாய இயக்கத்திற்குக் கீழ்க்காணும் நியதிகளே குறிக்கோளாக அமைந்தன.

(i) உலக முழுதும் ஒற்றுமையினையும், அமைதியினையும் ஏற்படுத்துவதற்காக உலக மக்களிடையே ஆன்மீக அறிவினை வரன் முறையாகப் பிரச்சாரம் செய்தல்.

(ii) கீதையிலும் பாகவதத்திலும் கண்டவாறு கண்ணனைப் பற்றிய சிந்தனையைப் பரப்புதல்.

(iii) இயக்கத்தின் உறுப்பினர்களிடையே, தாங்களும், தங்களைப் போன்ற பிறரும் கடவுளின் அவதாரமாகிய கண்ணனின் ஒரு கூறு என்ற உணர்வினை உண்டு பண்ணுதல்.

(iv) சைதன்ய மகான் கூறியபடி கடவுளின் பெயரால் அகண்ட நாம பஜனை செய்வதோடு, இசைவழியாகவே இறைவனைப் போற்றுகின்ற முறையினைப் பயிற்றுவித்தல்.

(v) கண்ணனின் பெயரால் புனிதமான வழிபாட்டுத் தலங்களை இயக்க உறுப்பினர்கள் கூடுதற்கென்று உண்டுபண்ணுதல்.

(vi) இயற்கையோடு பொருந்திய எளிய வாழ்க்கை மற்றும் நெறி முறைகளுக்கு இயக்கத்தின் உறுப்பினர்களைப் பயிற்றுவித்தல்.

(vii) இயக்கத்தின் கொள்கைகளையும் திட்டங்களையும் பற்றிய பிரச்சாரத்துக்கென்று நூல்களையும், இதழ்களையும், செய்தித்தாள்களையும் வெளியிடுதல்.

இந்த ஏழு நியதிகளையும் அணு அளவும் பிசகாமல் செயற்படுத்த வேண்டும் என்பதில் சுவாமிகள் கண்ணுங் கருத்துமாக இருந்தார். பவேரி பகுதியில் பஜனையைத் தொடங்கி நடத்திய இடத்தையே சீடர்கள் கோயில என்று அழைக்க ஆரம்பித்து விட்டனர். ஒருநாள் மாலை. ஆறு மணிக்குமேல் வழக்கமான வழிபாட்டுக்கும், சொற்பொழிவுக்குமாக சுவாமிகள் பவேரி தெருவிலிருந்த அந்தக் கூடத்திற்கு வந்தார். படியேறி மேலே வந்து கூடத்திற்குள் நுழைந்ததும், அவருக்குப் பெரிதும் அதிர்ச்சியாக இருந்தது. தான் வந்திருப்பது வழிபாட்டுக்கூடம் தானா என்று அவராலேயே நம்பமுடியவில்லை. ஒரு கணம் மலைத்து நின்று விட்டார். ஏனென்றால் சீடர்களில் சிலர் தாங்களாகவே முன்வந்து சுவாமிகளுக்கும் தெரியாமல் அந்தக் கூடத்தை அழகு ததும்பும் கோயிலாகவே அலங்கரித்து விட்டிருந்தனர். சுவாமிகள் அமர்வதற்கு ஒரு மரத்தாலான சிறு மேடை. அதன் மீது சிவப்பு வெல்வெட் துணி விரித்து ஒரு திண்டு. அதற்கு நேர் மேலே சுவற்றில் ராதாகிருஷ்ண ஓவியம். ஸ்ரீமத் பாகவதத்தின் அட்டையினைப் பார்த்து ஒரு மாணவ சிகாமணி வரைந்த வண்ண ஓவியம். அறையின் நான்கு பக்கச்சுவர்களிலும் வண்ணக் காகிதங்களை அழகாகக் கத்தரித்து ஒட்டிய அலங்காரம். கூடத்தின் மத்தியில் நடைவழி ஒதுக்கி சீராகப்பாய்களின் விரிப்பு, இவை எல்லாவற்றுக்கும் மேலாக, எங்கிருந்தோ கொண்டு வந்து ஏற்றப்பட்ட நல்ல விளக்கும ஊதுபத்தி மணமும் அறைமுழுதும் தெய்வீகத் தோற்றத்தை உண்டு பண்ணியிருந்தது.

முயற்சி வீண் போகவில்லை என்னும் பெருமித உணர்வோடு சுவாமிகள் அறை முழுதும் நோட்டம் விட்டார். சுவாமிகளைத் திடீரென்று வியப்பிற்கு உள்ளாக்க வேண்டும் என்னும் ஆர்வத்தில் செய்த இந்த செயல் பாரம்பரியத்துக்கு மாறுபட்டதாக இருக்குமோ என்ற அச்சத்தோடு சீடர்கள் மூச்சு வாங்காமல் சுவாமிகளைப் பார்த்தனர். மலர்ந்த புன்னகையோடு சுவாமிகள் அனைவரையும் நோக்கிக் கையமர்த்தி விட்டு 'கிருஷ்ண பக்தியின் தொடக்கம் இதுவே' என்று சொல்லி விட்டு மேடையை நோக்கிச்

சென்று அமர்ந்தார். கரப்பான் பூச்சிகளும், உடைந்த தரையும், அழுக்குப் படிந்த சுவர்களுமாக இருந்த வெறுங் கூடத்தை அருள் கனிந்த வழிபாட்டுத்தலமாக மாற்றிய கண்ணனின் சீடர்களை மனமாரப்பாராட்டினார். சீடர்களின் கை வண்ணம் எல்லாம் கிருஷ்ண ஒவியமாகவும், ராதையின் வண்ணப்படமாகவும் அறையினை அலங்கரித்திருப்பதை சொற்பொழிவு முடிந்ததும் தனித்தனியே கண்டு மகிழ்ந்தார். சஞ்சீவி மலையினைச் சுமந்து செல்லும் அனுமாரைப் பூனையைப்போல வரையப்பட்டிருந்ததை சுட்டிக்காட்டி அனுமாரைக்குறித்த ஒரு சொற்பொழிவே செய்து படத்தினைத் திருத்தச்செய்தார்.

(தொடரும்)

---

## மாவுத்தன் — (Mahout)

யானைப்பாகனைக் குறிக்கும் மாவுத்தன் எனும் தனிச்சொல் இலக்கிய வழக்கிலும் பயிலப்பட்டு வருகிறது. வடமொழியில் மிகவும் உயர்ந்த அதிகாரியைக் குறிக்கும் சொல் மகாமாத்ரா என்பதாகும். இச்சொல் மகாபாரதத்தில் காணப்படுகிறது. இந்த சமஸ்கிருதச் சொல்லை அடிப்படையாகக் கொண்டே மகாவாட் என்னும் சொல் வந்தது. அதனின்று மீண்டும் மருவி 'மகோட்' பிறந்தது. உயரமான யானையினை அடக்குவோனையும் உயர்ந்த மனிதன் என்று கேலியாக அழைக்கத்தொடங்கி, பின் அதுவே வழக்கத்திலும் வந்து விட்டது. இதுவே இச்சொல்லின் வரலாறாகும்.

---

# நூல் மதிப்புரை

(1)

நூல் : ராகுல் சாங்கிருத்யாயன்
ஆசிரியர் : பிரபாகர் மாச்வே
வெளியீடு : சாகித்திய அகாடெமி
29, எல்டாம்ஸ் சாலை
சென்னை-18.

புகழ் பெற்ற துப்பறியும் நிபுணனைப் படைத்த ஆர்தர் கானல் டாயில் பற்றி பலருக்குத் தெரியாது. ஆனால் துப்பறியும் நிபுணன் ஷெர்லாக் ஹோம்ஸ் பற்றி எல்லோருக்கும் தெரியும். அதுபோலவே 'வால்கா முதல் கங்கை வரை' என்னும் சிறுகதைத் தொகுதி பற்றி அனைவரும் கேள்விப்பட்டிருப்பர். ஆனால அதனுடைய ஆசிரியரைப் பற்றியும் தெரிந்திருப்பர் என்று உறுதியாகச் சொல்ல முடியாது. இந்திய இலக்கியச் சிற்பிகள் வரிசையில் ராகுல் சாங்கிருத்யாயனைப் பற்றிய வரலாற்று நூலாக வெளியிடப்பட்டுள்ள இந்நூல் இக்குறையினைப் போக்கி விடுகின்றது.

உத்தரபிரதேச அஜாம்கார் வட்டத்தில் ஒரு சிற்றூரில் ஒரு எளிய பிராமண குடும்பத்தில் பிறந்த கேதார்நாத் பாண்டே தான் இந்த ராகுல். பதினான்கு வயது பையனாக இருந்த போதே வறுமைப்பட்டு வேலைதேடி வெளியூருக்கு ஓடியவர். இவருக்கு இருந்தது வயிற்றுப் பசி மட்டுமல்ல. தீராத அறிவுப் பசி. இந்த அறிவுப் பசிக்கு இரைபோடுகின்ற பணியில் தனது வாழ்நாட் காலம் முழுவதும் இந்தியா, திபெத், நேபாளம், இலங்கை, இங்கிலாந்து, ஜப்பான், கொரியா, சீனா, மஞ்சூரியா, ரஷ்யா, ஈரான் போன்ற அயல் நாடுகளில் உலக யாத்திரிகராகச் சுற்றி அலைந்திருக்கிறார். அனுபவ ரீதியாக அவர் அறிந்திருந்த மொழிகள்முப்பது. ஆயினும் இந்தி, வடமொழி போஜ்புரி, பாலி, திபெத் ஆகிய ஐந்து மொழிகளில் நூற்றி இருபதுக்கு மேற்பட்ட நூல்களை அவர் எழுதியுள்ளார். பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பயிலாத காரணத்தால் இந்தியநாட்டுப் பல்கலைக் கழகங்கள் அவரை ஏறெடுத்தும் பார்க்கவில்லை, ஆயினும் இந்நூற்றாண்டின் இருபதுகளில் இலங்கைப் பல்கலைக் கழகத்தில் சமஸ்கிருதம், பயிற்றி நாற்பதுகளில் லெனின்கிராடு பல்கலைக் கழகத்தில் தத்துவப் பேராசிரியராகவும் பணிபுரிந்துள்ளார். திபெத்திய மொழி பயிலும்போது ஒரு பௌத்தப் பெயராக வைத்துக்கொண்ட ராகுல் சாங்கிருத்யன்

என்பதே நிலைத்து விட்டது. இமாலய நாடுகளில் அவர் சுற்றித் திரிந்தபோது ஒரு துறவியாக இருந்துள்ளார். டிக்கட் இல்லாத ரயில் பயணங்களில் நாடோடியாகக் காட்சியளித்துள்ளார். எங்கு போனாலும், எந்தப் பணிபுரிந்தாலும், புதிய செய்திகளைத் தெரிந்து, எழுதுவதிலேயே காலத்தைக் கழித்திருக்கிறார். இல்லை-யாயின் நூற்றுக்கு மேற்பட்ட நூல்களை எழுத முடியுமா? நாவல், சிறுகதை, வாழ்க்கை வரலாறு, பயண நூல், கட்டுரைகள், அரசியல், தத்துவம், சமயம், பாடல், வரலாறு மொழிபெயர்ப்பு என்றின்ன பல்வேறு வகைகளில் தனது படைப்புகளை ஈந்துள்ளார், எழுபது வயது வரை வாழ்ந்த இந்த மகாமேதையின் அரசியலும், தனிப் பட்ட குடும்ப வாழ்க்கையும் சிறக்கவில்லை, காங்கிரஸில் இருந்து கம்யூனிசத்துக்கு மாறி அங்கிருந்தும் கொள்கை வேறுபட்டால் விலகித் தனித்திருந்தார். நேபாளத்தில் ஒரு திருமணம். பின்னர் ரஷ்யாவில் ஒன்று. உலக பந்தங்களுக்கு அப்பால் அழிக்க முடி-யாத அறிவுத் தொடர்புக்குத் தன்னை ஆட்படுத்திக் கொண்ட இந்த மாமேதையோடு பன்னெடுங்காலம் நெருங்கி வாழ்ந்த மாச்வே அவரைப் பற்றி ஒரு சிறிய நூலாக எழுதி விட்டாரே என்பது ஒரு குறை. சற்று விரிவாகச் செய்திருக்கலாம், எழுதப்-பட்ட ஒரு நூலைத்தமிழில் பெயர்த்த வல்லிக்கண்ணன் இதனை நிவர்த்தி செய்ய முடியாது தான். சாகித்ய அகாடெமி ராகுல் பற்றிய வெவ்வேறு தலைப்புகளில் சிற்சில நூல்களையாவது பிறரை மீண்டும் எழுதச் செய்து அம்மாமேதையின் நினைவுக்கு அஞ்சலி செலுத்தலாம்.

---

## கடவுள் உண்டா? இல்லையா?

விண்வெளியில் இரவில் நாம் காணும் நட்சத்திரக் கூட்டம் அனை-த்தும் அருணோதயத்தில் காணப்படுவதில்லை. எனவே வானத்தில் நட்சத்திரங்களே இல்லை என்று சொல்லிவிட முடியுமா? அது போன்று, உன்னுடைய அறியாமையினாலே நீ இறைவனைக் காணமுடியவில்லை என்றால், இறைவனே இல்லை என்று சொல்லி விடாதே.

— இராமகிருஷ்ணர்.

(2) நூல் : துக்காராம்
ஆசிரியர் : பாலசந்திர நருமதே
வெளியீடு : சாகித்ய அகாடெமி

பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மராத்திய மாநிலத்தில் வாழ்ந்த துக்காராமின் வாழ்வும், இலக்கிய சாதனைகளும் இந்நூலுள் திறம்பட ஆராயப்பட்டுள்ளன துக்காராம் நால்வருணப் பாகுபாட்டில் கடைசி நிலை எனப்படும் வேளாளர் குடும்பத்தில் பிறந்தவர். தீவிரமான வைதீக பிராமணியத்தை எதிர்த்துத் தோன்றிய வரகரி எனும் சமயப்பிரிவைச் சார்ந்த துக்காராம் ஐயாயிரத்துக்கு மேற்பட்ட பாடல்களை எழுதியவர். விட்டலப் பெருமானை வணங்கி வாழ்த்திய பாடல்களே என்றாலும் இறைவன் ஒன்றே எனும் கொள்கையினையே அவைகள் வலியுறுத்துகின்றன. கடுமையான பண்டித நடையில் இல்லாது பாமரருக்கும் புரியுமாறும், தாளத்திற்கேற்குமாறும் அவை எழுதப்பட்டுள்ளன. எனவே தான் துக்காராமின் பாடல்கள் பண்டிதரும், பாமரரும் போற்றி வழங்கும் தன்மையில் மராத்திய இலக்கியத்தின் பல்வேறு கூறுகளிலும் ஊடுருவி நிற்கின்றன இன்றுங் கூட கிராம மக்கள் காலையிலும் மாலையிலும் அவருடைய கீதங்களைப் பாடுகின்றனர்.

துக்காராம் வாழ்ந்த காலத்தில் பழமையில் ஊறிக்கிடந்த கிடந்த பிராமணீயம் அவரை எதிர்த்தது மராத்திய மொழியில் கீதையினை பெயர்த்தெழுத முற்பட்டபோது ஒரு சூத்திரன் அதனைச் செய்வதா என்று தொல்லை கொடுத்தனர். அவரது 37-ஆவது வயதில் அவர் எழுதிய கவிதைகள் அனைத்தையும் ஆற்றில் போடச் செய்தனர். சின்னாட்கள் கழித்து அந்த ஏடுகள் சேதமுறாமல் நீரில் மிதந்தனவாம். மத நம்பிக்கையில் சமரச உணர்வும், மூடநம்பிக்கை ஒழிப்பில் முற்போக்கு எண்ணங்களும், தனது கொள்கையில் அசையாத உறுதிப்பாடும் கொண்ட துக்காராம் ஆன்ம சித்தி அடைந்தவரென்றும் இறந்த குழந்தையினைப் பிழைக்க வைத்தாரென்றும் கூறப்படுகிறது. அவரது பாடல் தொகுதி 1867-இல் பம்பாயில் வெளியிடப் பெற்றது.

நிறைய மேற்கோட்பாக்களைக் கொண்ட இம்மொழி பெயர்ப்பு சிறப்புறவே அமைந்துள்ளது. எனினும் செறிவும் திண்மையும் இல்லாத வழவழ நடைபாக இருக்கிறது. மறு பதிப்பு வந்தால் நூலின் முதற்பகுதியான முன்னுரையைத் திருத்தமுற எழுதுதல் நன்று.

# தமிழன் தந்த விஞ்ஞானம்

— (சென்ற இதழ் தொடர்ச்சி)

சு. சிவபார்வதி

## வேதியியல் (Chemistry)

வேதியியல் துறை எளிய பொருட்கள் சேர்ந்து சிக்கலான கூட்டுப்பொருட்கள் உண்டாவது பற்றியும் சிக்கலான கூட்டுப்பொருள்களிலிருந்து எளிய பொருள்கள் பிரிந்து வெளிப்படுவது பற்றியும் ஆராய்கிறது. பொருள் அழியாது என்பது வேதியியல் துறை முடிபு.

'உள்ளது போகாது ; இல்லது வாராது'

என்று சைவ சித்தாந்தம் கூறுகிறது. அதையே விஞ்ஞானம் "ஒரு சக்தியை ஆக்கவோ அழிக்கவோ முடியாது ஆனால் ஒரு சக்தியை வேறொரு சக்தியாக மாற்ற முடியும் [energy can neither be created nor be destroyed but can transform from one form to another] என்று உரைக்கிறது.

கோயிலிலுள்ள மூலவர்களில் சில நவபாஷாணங்களாலும் சில பஞ்சலோகங்களாலும், சில மரகதத்தாலும் ஆகியுள்ளன. தமிழர்களின் - இந்துக்களின் கடவுள் வழிபாட்டின் ஒரு பகுதியாகிய திருமுழுக்கின் போது வெளியிடும் திரவங்கள் (பால், வெண்ணை, தயிர் முதலானவை) சிலைகளில் பட்டு வெளிவரும் பொழுது சில மாறுதல்களை அடைந்து பிணிநோய் தீர்க்கும் மருந்தாக அமைவதால் பக்தர்கள் அத்திரவத்தை புனிதமாக கருதி பருகிவருவதையும் பழக்கமாகக் கொண்டனர்.

## தாவர இயல் (Botany) :

தமது கண்டு பிடிப்புக்களால் வெங்கடராமன் கரும்புச் சாகுபடியை அமோகமாக வளர்த்தார். உலகம் முன்னம் கண்டிராத புதிய கரும்பு வகைகளை நூதனமாய்ப் படைத்தார். நாட்டில் சீனிப் பஞ்சம் தீரக் காரணமாயிருந்தார். மேலும் பல உயர்ரக வித்துக்களைக் கண்டு பிடித்தார்.

## கட்டிடக் கலை (Architecture) :

நகர அமைப்பு, வீடு கட்டுதல் முதலியவற்றைப் பற்றிய சிறந்த அறிவும் தமிழ் நாட்டாருக்கு இருந்து வந்தது. நகரங்களிலுள்ள வீதிகள் ஒழுங்காக அமைந்திருந்தன, வீதிகள் இணை-

மாக அமைந்திருந்தன. ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குப் போகக் குறுக்கு வழியில் செல்லும் முறையில் வீதிகள் அமைந்திருந்தன. சந்தி, சதுக்கம், அம்பலம், மன்றல், பொதியில் முதலிய இடங்கள் இருந்தன. கெட்ட நீரை ஊருக்கு வெளியே போக்குதற்குரிய கரந்து படை அல்லது கரந்துறை (under ground drainage) யென்னும் நீர்த்தாரைகள் வீதியின் நடுவிற் கீழே இருந்தன. கற்களால் அவை மூட்டப்பட்டிருக்கும். வேண்டின் நீரை நிரப்பியும், வேண்டாவிடிற் போக்கியும் விடுதற்குரிய வாவிகள் இருந்தன. அவை எந்திரவாவி யெனவும், இலவந்திகை யெனவும் கூறப்படும். மக்கள் மாலை நேரங்களிலும் வேனிற்காலத்திலும் புகுந்து மகிழ்தற்குரிய பல இளமரக்கா இருந்தன; செய்குன்றங்களும் உண்டு. அரசர் முதலியவர்களுக்குத் தனித்தனியே வீதிகள் இருந்தன. மதுரை நகரத்திலும் காவிரிப் பூம்பட்டினத்திலும் நாளங்காடி அல்லங்காடியென்ற இருவகைக் கடைத் தெருக்கள் இருந்தன. நாளங்காடி காலைக் கடை: அல்லங்காடி மாலைக்கடை.

இன்று கண்டுபிடிக்கப்பட்ட சிமிண்டை விட, சிமிண்டின் பலதரப்பட்ட உறுதி நிலைகளை அன்றுள்ள முட்டை, சுண்ணாம்பு, கருப்புக்கட்டி போன்ற பொருட்களின் கலவைகளால் ஆன கட்டிடங்கள் மிக உறுதி வாய்ந்ததாக இருந்தன.

அரசர்கள் வாழும் நகரங்களில் அகழியும் மதிலும் இருந்தன. மதிலின் மேற் பகைவர்களைத் தடுப்பதற்குப் பலவகைப் பொறிகள் அமைக்கப் பெற்றிருந்தன. கோட்டை வாயில்களும் ஊருக்குள் பிறரறியாத வாறும் வெளியிலிருந்து புகுதற்குரிய நுழை வழிகளும் உண்டு.

## அணிகலன்கள் (Ornaments)

பொன்னாலும் வெள்ளியினாலும் நவமணிகளாலும் செய்யப்பட்ட பலவகை அணிகள் அக்காலத்தில் அணியப்பட்டு வந்தன. அவற்றை இயற்றும் நல்ல தேர்ச்சியுடையவர்கள் இருந்தார்கள் நவமணிகளைப் பற்றிய இலக்கணங்களையும் நன்கு அறிந்திருக்கின்றனர். அவற்றிற்குரிய நூல்கள் பல இருந்தன. சிலப்பதிகாரத்திலும் அதன் உரையிலுள்ள மேற்கோட் சூத்திரங்களிலும் நவமணிகளைப் பற்றிய வரலாறுகள் பல கூறப்படுகின்றன.

கல்லாடத்திலும், திருவிளையாடற் புராணங்களிலும், பழைய சாசனங்களிலும் நவமணிகளுக்குரிய குணங்களும் குற்றங்களும் சொல்லப்படுகின்றன.

(1) இந்திர நீலம் (2) கோமேதகம்
(3) சந்திர காந்தம் (4) புட்பராகம்
(5) முத்து (6) பவளம்
(7) வயிரம் (8) மரகதம்
(9) வைடூரியம் (10) பத்மராகம்
(11) கார்க்கேதம் முதலிய மணிகள்

ஆடை :-

எல்லாச் சூழ்நிலைகளுக்கும் ஒத்துப் போகக்கூடிய ஆடைகளை முதலிலும் பின்னர் அதையே பருத்தி நூலாக்கி பருத்தி-யாடையாகவும் அணிந்து வந்தனர். இன்றைய மருத்துவர்கள் தோல்வியாதிகள் சிலவற்றிற்கு செயற்கை முறை நூல் இழை-களால் ஆன ஆடைகளால் ஏற்பட்ட அலர்ஜி என்று கூறி பருத்தி யாடை அணியச் செய்கின்றனர்.

அக்கால அரசியல் அலுவலாளர் சட்டை அணிந்திருந்தனர் என்று தெரிகிறது. சட்டைக்கு மெய்ப்பை என்னும் பெயர் முற்-காலத்து வழங்கியது.

"மெய்ப்பை புக்க வெருவருந் தோற்றத்து"

எனவரும் முல்லைப்பாட்டின் அடிகளால் அறியலாம்.

சட்டைக்கு வழக்கிய மற்றொரு பெயர் கஞ்சுகம் என்பது

"காவற் றொழுது கஞ்சுகள் உரைப்போன்"

என வரும் மணிமேகலை அடியும்

"கஞ்சுக முதல்வர்"

எனவரும் சிலப்பதிகார அடிகளும் இவ்வுண்மையை உணர்த்தும்.

வாணிகம் (Trade) :-

தமிழகத்தின் வணிக வரலாறு மிகப் பழமை உடைத்து, இந்தியப் பெருங்கடலில் கலஞ் செலுத்தி எகிப்து, பாபிலான், சால்டியா முதலின நாகரீக முயர்ந்த நாடுகளோடு பல்லாயிர-

மாண்டு கட்கு முன்னரே தமிழர் பண்டமாற்றி வந்தனர். கி. பி. முதலாம் நூற்றாண்டிலிருந்து நான்காம் நூற்றாண்டுவரை தமிழர் உரோமப் பேரரசோடு வர்த்தகம் செய்து வந்தனர்.

யவனருக்குப் பின் இந்தியப் பெருங்கடல் வணிகம் அரபி நட்டார்க்குச் சொந்தமாயிற்று. பல்லவர் அரசாட்சியில் தமிழர் கீழ்த்திசையில் பர்மா, மலையம், சாவகம், சுமத்ரா, சீயம் முதலிய நாடுகளோடு வாணிகஞ் செய்து வந்தனர்.

கி. பி. 9ம் நூற்றாண்டின் துவக்கத்தில் தமிழரின் பெருங்கலங்களும், அராபியரின் காற்றைப் போல் வேகமுடைய கப்பல்களும் சீனர்களின் 'சங்க' எனப் பெரிய குன்ற மன்ன நாவாய்களும் இந்தியப் பெருங்கடலிற் கூட்டங் கூட்டமாகக் கீழ் மேற்றிசைகளிற்பாய்களை வரித்து அங்கு மிங்கும் சென்று கொண்டிருந்தன என்று சீனப் பயணி எழுதுகிறான்.

கண்ணாடி, கற்பூரம், பட்டு முதலிய பண்டங்கள் சீனத்திலிருந்தும், இலவங்கப்பட்டை, கிராம்பு, சாதிக்காய், சாதிப்பத்திரி முதலிய கிழக்கிந்திய தீவுகளிலிருந்து, குதிரைகள் அராபியிலிருந்தும் இறக்குமதியாயின.

ஜவஹர்லால் நேரு தனது "Glimpses of World History"-ல் இராஜேந்திர சோழன் காலத்தில் தமிழ் நாட்டில் கடல் வாணிகம், கடற்படை சிறந்து விளங்குகிறது என்று குறிப்பிடுகிறார்.

தருக்க நூல் (Logic) :-

இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் விக்கிரம சிங்க புரத்தில் பிறந்த சிவஞான முனிவர் எழுதிய 'சிவஞானப் போதச் சிற்றுரை', 'பேருரை'களின் மூலம் தருக்க நூலைப் பற்றிப் பரக்கக் காணலாம்.

இசை :-

பண்டைத் தமிழகத்திலே இசைக்கலை மிகவும் வளர்ந்திருந்தது. புகழ் பெற்றிருந்தது. இன்று கர்நாடக சங்கீதம் என்று போற்றப்படும் நுண்கலை பண்டைத் தமிழிசையின் வளர்ச்சி தான் என்பதே இசைக்கலை வல்லுநர் பலரின் கருத்து.

மருத்துவம் (Medicine) :-

மருத்துவ நூல்களும் மருத்துவம் வல்ல நல்லிசைப் புலவர்கள் பலரும் இருந்ததைப் பழைய நூல்களால் அறியலாம். மூலிகைகளைப் பற்றிய ஆராய்ச்சி விரிவுற்றிருந்தது.

புலால் உண்ணுவதை மறுத்து வள்ளுவரும் ஔவையாரும் கூறுகின்றனர். இதனால் உடல் நலத்திற்குத் தீங்கு நேரிடுமென்கின்றனர்.

இக்காலத்தில் சிறந்து விளங்குவது மருத்துவக்கலை. ஆங்கில மருத்துவமுறை, சித்த வைத்திய முறை என இரு பிரிவுகளைக் கொண்டதாக விளங்குகிறது. இதில் ஆங்கில மருத்துவம் மாரடைப்பு சர்க்கரை வியாதி முதலான நோய்களுக்கு அவர் தின்ன விரும்பியதை கொடுக்காமல் அவர் நோய் தணிவதற்குரிய மருந்தை ஆராய்ந்து கொடுக்க வேண்டும், என்று அறிவியல் முறைப்படி இன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆனால் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகிய நற்றிணை அன்றே இதனை வலியுறுத்துகிறது. என்பதை

"அரும்பிணி உறுநர்க்கு வேட்டது கொடாது
மருந்த ஆய்ந்து கொடுத்த அறவோன்"

என்றுரைக்கிறது. இதில் அறவோன் என்று மருத்துவனைக் கூறுவது குறிப்பிடத்தக்கது. மருத்துவன் என்று நாம் இன்று கூறுபவன் நோய்கள் பலவற்றையும் அறிந்து அவற்றைத் தீர்ப்பதற்குரிய வழியினை அறிந்தவனை. ஆனால் இதற்கீடாய் நோய் இன்னது அதற்குக் கொடுக்க வேண்டிய மருந்து இது. மருந்துண்ணும் போது சாப்பிடவேண்டியன இவை சாப்பிடக் கூடாதன இவை என்று அறிந்தவனை அறவோன் என்றனர். இதை நோக்க இன்றைய மருத்துவத்தில் விஞ்ஞானத்தின் பங்கு என்ன என்பதை அறியலாம்.

தமிழர்களின் மருத்துவக்கலைத் தேர்ச்சியின் சிறப்பைக் காண வேண்டுமானால் திருக்குறள் ஒன்றே போதுமானதாகும். மருந்து என்னும் அதிகாரத்தைப் படிப்போர் இவ்வுண்மையை உணரலாம்.

நோய்வாராமல் காத்துக் கொள்ளும் வழி நோய் வந்தபின் அந்நோயை ஒழிக்க மருத்துவம் செய்யும் முறை இவைகளைத் திருக்குறள் விளக்கமாகக் கூறுகிறது மருந்து என்னும் அதிகாரத்தில்

1) உணவு மிகுந்தாலும் குறைந்தாலும் நோய் உண்டாகும்.
2) உண்ட உணவு செரித்தபின் அளவோடு உண்டால் நோய் அணுகாது.
3) உண்ட உணவு செரித்தபின் அளவோடு உண்பது தான் நீண்ட காலம் வாழ்வதற்கு வழி
4) குற்றமறற உணவை நன்றாக பசி எடுத்த பின் உண்ணுக.
5) நல்ல உணவை அளவோடு உண்டால் உயிருக்கு ஆபத்தில்லை.
6) குறைவாக உண்பவன் இன்புறுவான், அளவுக்கு மீறி உண்பவன் பிணியால் துன்புறுவான்.
7) பசியின் அளவு தெரியாமல் மிகுதியாக உண்பவன் அளவற்ற நோய்களுக்கு ஆளாவான்.

என்று கூறுகிறது.

நோயாளருக்கு எப்படி மருத்துவம் செய்ய வேண்டும் என்று கூறப்படும் குறள்கள் மிகச்சிறந்த கருத்துள்ளவை.

"முதலில் நோய் இன்னதென்று தெரிந்துகொள்ள வேண்டும்; அதன்பின் அந்த நோய் எப்படி வந்தது என்ற காரணத்தை அறிய வேண்டும். அதன்பின் அந்த நோயைத் தணிக்கும் வழிகளைக் காணவேண்டும். அதன்பின் அதற்குத் தகுந்த மருந்தை கொடுக்க வேண்டும்"

"நோய் நாடி நோய்முதல் நாடி அது தணிக்கும்
வாய் நாடி வாய்ப்பச் செயல்"

இத்திருக்குறளை மறவாமல் பின்பற்றும் வைத்தியர்கள். தங்கள் தொழிலிலே வெற்றி பெற முடியும்.

"நோயின் நிலைமை மருந்து கொடுப்பதற்கேற்ற காலம் இவற்றை ஆராய்ந்து மருத்துவம் செய்ய வேண்டும். இதுவே வைத்தியன் கடமை"

"நோயாளி, மருத்துவன் மருந்து நோயாளியின் பக்கத்திலிருந்து பார்த்துக் கொள்கின்றவன் என்று நான்கு பகுதிகளை உடையது மருத்துவ முறை என்பதை

"உற்றவன் தீர்ப்பாள் மருந்து உழைச்செல்வான் என்று
அப்பால் நாற்கூற்றே மருந்து"

1) நோயின் நிலையை நன்றாக பரிசோதிக்க வேண்டும். ஒரே நோய், அவரவர்களின் உடல்நிலைக்கு ஏற்றவாறு கடுமையாகவும் இருக்கும் குறைவாகவும் இருக்கும். நோயாளியின் தாங்கும் சக்தியையும் அறிந்து அதற்கேற்றபடி மருத்துவம் செய்ய வேண்டும்.

2) இரண்டாவது நோய் தீர்ப்பவனாகிய மருத்துவன் மருத்துவ முறையினை நன்றாக அறிந்திருக்க வேண்டும். நோயாளியின் நம்பிக்கை உண்டாகும்படி நடத்து கொள்ள வேண்டும்.

3) மூன்றாவது மருந்து அது நோயைத் தீர்க்காவிட்டாலும் கெடுதி செய்யாமலிருக்க வேண்டும். ஒரே நோய்க்கு பல மருந்துகள் உண்டு நோயாளியின் உடல் நிலைக்கேற்ற மருந்து இது என்று கண்டு பிடிக்க வேண்டும்.

4) நான்காவது நோயாளியின் பக்கத்திலிருந்து பார்ப்பவன் (நர்ஸ்) அவனும் நோயாளியின் நிலையை அறிந்து அவன் வருந்தும்போது அவ்வருத்தத்தைத் தணிக்கும் தன்மையுள்ளவனாக இருக்க வேண்டும். நோயாளியில் பக்கத்திலிருப்பவனுக்கும் மருத்துவ நூல் அறிவும் நோயாளியைப் பாதுகாக்கும் பயிற்சியும் அமைந்திருக்க வேண்டும்.

மருத்துவத்தைப் பற்றி மேலே கூறப்பட்டிருக்கும் செய்திகளைக் கொண்டு பண்டைத் தமிழரின் மருத்துவ அறிவைக் காணலாம். மக்களின் நல்வாழ்வுக்கு இன்றியமையாத மருத்துவக் கலையிலே பண்டைத் தமிழன் அக்கரை காட்டினார். அக்கலையிலே பண்டைத் தமிழன் அக்கரை காட்டினார். அக்கலையை வளர்த்து வந்தனர். தமிழ் நாட்டிலே மருத்துவக்கலை மிகவும உயர்ந்த நிலையில் வளர்ந்திருந்தது இதுவுண்மை. இவ்வுண்மையை பண்டைத் தமிழ் நூல்கள் உணர்த்துகின்றன.

வழிபாடு :-

நம் முன்னோர்கள் காலை மாலை இரு வேலைகளிலும் சூரியவழிபாடு நடத்திய பின்னரே உணவு உட்கொள்ளும் பழக்கத்தை மேற்கொண்டிருந்தனர். ஆனால் வழிபாடு செய்யும் பொழுது தலைகுனிந்து நெற்றி வணங்கியும், நெற்றி தரையில் படும்படி வணங்கியும் மூச்சை மெல்ல இழுத்து நிறுத்தியும், நிறுத்திய மூச்சை மெல்ல வெளியே விட்டும் வழிபாடு நடத்துவர். இதனால் ஒரே நேரத்தில் உடற்பயிற்சியும், கண்களுக்கும் மூளைக்கும் தேவையான சூரிய வெளிச்சத்தையும் உடலிற்குத் தேவையான வைட்டமின் Dயும் கிடைக்கிறது. இதை தற்கால மருத்துவங்கள் இளங்குழந்தைக்கு மீன் எண்ணையை உடலிற் தடவி இளம் வெயிலில் போடுமாறு பரிந்துரை செய்கின்றனர். மேனாடுகளில் sun bath என்று கூறிக் கொண்டு கடற்கரையில் உலாவுவது அன்றாடப் பழக்கமாகிவிட்டது.

முருகு எனில் இளமை, அழகு என்று பெயர். அந்த அழகு இளமை கொஞ்சும் மலைச்சாரலில், மலைகளில், குன்றுகளில் வீற்றிருக்கும் இயற்கையைத் தெய்வமாக அதுவும் முருகக் கடவுளாக வருணித்து வழிபட்டு வணங்கி வந்தனர். பிணி நோய் தீர்க்க முருகனை நோக்கித் தவம் இருந்து அதில் வெற்றியும் கண்டனர். எப்படியெனில் அவ்வாறு அவர்கள் தவமிருக்கும் காலை அவர்கள் அக்குன்றுகளில் இருந்த மூலிகையிலிருந்து வீசும் காற்றைச் சுவாசித்து நல்லுறம் பெற்றனர். அதையே மனதிற் கொண்டு இன்றைய மருத்துவர்கள் ஒரு சிலர் உடல் நலம் பெறுவதற்காக கோடை வாசஸ்தலங்களில் ஒரு குறிப்பிட்ட காலம் கண்டிப்பாக ஓய்வெடுக்குமாறு பரிந்துரைக்கின்றனர்.

கடற்கரைக் காற்றைச் சுவாசிப்பதால் உடலுக்கு நலம் ஏற்படும் என்கின்றனர். ஆனால் உள்நாட்டில் அத்தகைய கடற்காற்று கிடைப்பதில்லை. குற்றாலம் பராசக்திக் கல்லூரியில் எடுத்துக் கொண்ட ஒரு ஆராய்ச்சியின் பேரில் கிடைத்த உண்மை யாவது; ஓம் என்னும் இறைவனது ஓங்கார நாமத்தைக் கூறும் பொழுது அந்த ஒலி அலைகளானது மூலவிக்கிரத்தில் பட்டு எதிரொலிக்கும் பொழுது கருவறையைச் சுற்றியுள்ள காற்றைச் சுத்தப்படுத்துகிறது. அவ்வேலையில் வழிபடும் பக்தர்கள் கடற்காற்றைவிடச் சுத்தமான அக்காற்றைச் சுவாசித்து நன்மை அடைகின்றனர் பண்டு தொட்டே மக்கள் காலையிலும் மாலையிலும் தேவாலயங்களுக்கும் சென்று வழிபட்டு வருவதைத் தங்கள் அன்றாடக் கடமைகளில் தலையாயதாகக் கொண்டனர். உடல்

வளம், வன்மை பெற்று விளங்கின. இதையே "கோயிலிலா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்று கூறிப் போந்தனர் நம் முன்னோர்கள்.

அரசு வேம்பு இணைந்தொரு மரப்பிணைப்பின் அடியில் வினாயகர் எனும் கடவுளை உருவகித்து நிறுவி பெண்கள் மகப்பேறு அற்றவர்களாயிருப்பின் அதிகாலையில் குளித்து ஈர உடையில் வினாயகரை எண்ணித் துதித்து பலமுறை வலம் வந்தால் பலன் பெறுவர் எனக் கூறுவர். பலனடைந்தனர். இதை மூடப் பழக்கம் என ஒதுக்கி வருகின்றோம். ஆனால் இதில் அடங்கியுள்ள உண்மை என்னவெனில் "அதிகாலை வேளை ஈரத்துணியுடன் அரசு வேம்பு முதலிய மரத்தைச் சுற்றி வரும் பொழுது அம்மரங்கள் வெளியிடும் காற்று உடலுக்குத் தேவையான மேற்கூறிய நோய் தீர்க்கும் மூலிகை மருந்தாக பயன் பட்டு அந்நோய் தீர்க்கின்றது" என்பதே யாகும்.

முடிவு :-

மனித இனத்தின் வரலாறு பற்றித் தமிழன் விரிவாக அறிந்திருந்தான். கணக்கியலை தமிழன் எவ்வாறு கற்றுணர்ந்திருந்தான் என்று தெரிகிறது தமிழனின் வான நூல் வளம் மிகுந்தது. இயற்பியல், வேதியியல் செடியியல் ஆகியவற்றில் பண்டும் இன்றும் தமிழன் ஆற்றிய பணி விளக்கப்பட்டது. தமிழனின் கட்டிடக் கலை எப்படி விஞ்சி நின்றது என்று கண்டோம். தமிழனின் ஆடை அணிகலன்களின் விவரங்கள் உள. பருவந்தோறும் பிழையாமல் வீசும் காற்றின் வரவு அறிந்து கடலில் கலம் செலுத்திப் பிற நாடுகட்குச் சென்று வாணிகம் புரிதற்குச் சிறந்த வழி கண்டவர் கரிகாலனுடைய முன்னோராகிய சோழர் என்றும் உள்நாட்டு வாணிகச் சிறப்பையும் அறிந்தோம், கொலம்பசு, வாஸ்கோடகாமா இவர்களுக்கு முன்னர் தமிழன் நீலக்கடலிலே நெடுந்திரை பிளந்து நாவாய் ஓட்டுவதில் வல்லவர்களாய்த் திகழ்ந்தனர். மருத்துவ நூல்களும் மருத்துவம் வல்ல நல்லிசைப் புலவர்கள் பலரும் இருந்ததைப் பழைய நூல்களால் அறியலாம். மூலிகைகளைப் பற்றிய ஆராய்ச்சி விரிவுற்றிருந்தது. விஞ்ஞானம் எப்படி என்பதற்குப் பதில் கூறும். சமயம் ஏன் என்பதை ஆராயும் தருக்க நூல்களில் வல்லவனாய் இருந்தான் தமிழன் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற உலக சகோதர நேயத்தை அன்றே பரப்பினான் தமிழன். தமிழன் அன்றும் இன்றும் விஞ்ஞானத்தின் பல துறைகளில் வல்லவன். அதைப் பின்பற்றி முயன்று விஞ்ஞானத்தை ஆக்க வழிகளிற் பயன்படுத்தி நாம் வளமடைய முயல்வோமாக.

—முற்றும்

## பழமொழிகளில் — பெண்டிர்

மா. மீனாட்சிசுந்தரம்
ஆய்வாளர்

### முன்னுரை

தாயாகவும், குழந்தையாகவும், கன்னிப்பெண்ணாகவும், மனைவியாகவும், மருமகளாகவும், மாமியாகவும், விதவையாகவும் பல நிலைகளில் அமைகிறது பெண்ணின் வாழ்க்கை அந்த ஒவ்வொரு நிலையில் பெண்ணுக்கு வழங்கப்பட்ட உரிமைகளை-யும், விதிக்கப்பட்ட கடமைகளையும் வரையறுக்கப்பட்ட கட்டுத்-திட்டங்களையும் நமது வரலாற்றின் மூலமாகவும் இலக்கியங்-களின் மூலமாகவும் தெளிவாக அறியமுடிகிறது. சமுதாயத்தின் பல இயல்புகளைப் பற்றிக் கருத்துரைக்கும் பழமொழியும், சமு-தாயத்திலே பெண்ணுக்கு இருந்து வந்த நிலை பற்றித் தனது நோக்கில் சில விபரங்களைத் தருகிறது.

### தாய்மை :

தாய்மைக்கு உலகு எங்குமே ஒரு தனி உயர்வு இருந்து வருகிறது. அந்தப் பொது உயர்வு தமிழகத்திலும் இருந்தேவந்தது. "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்", "தாயிற் சிறந்த தொரு கோறலும் இல்லை" என்றெல்லாம் தாய்மையை வியந்து பேசுகிறது பிற்காலத் தமிழ்நீதி.

தாயானவள் மதிப்பு நிலையில் முதன்மை பெற்றாலும், வாழ்க்கை நிலையில் அவளுக்குத் தனிச்சிறப்பு எதுவும் தரப்-பட்டிருப்பதாகத் தெரியவில்லை. வயது வரும் வரை தாயின் அன்புப் பேரணைப்பில் வளருகின்ற மக்கள், மணமாகித் தனித் தனிக் குடும்பங்கள் ஆனபின் அவரவருடைய காரியத்தையே கவனிக்கிறார்கள். கடவுளிலெல்லாம் பெரிய கடவுளாகிய தங்கள் தாயை அவர்கள் சரியாகப் பராமரிப்பது கூட இல்லை; திரு-மணம் ஆன முதல், ஆடவனுக்கு அவனுடைய மனைவியும் அவள் வழிவரும் மக்களுமே முக்கியமாகிவிடுகிறார்கள். திருமணமான

உடனேயே தாய்க்கும் மகனுக்கும் உள்ள உறவு எந்த நிலையை அடைகிறது என்பதை, "பெற்றதாய் மூதேவி, புகுந்ததாரம் சீதேவியா?" என்னும் பழமொழி தெளிவாக விளக்குகிறது. ஒரு மகன் மட்டும் இருந்தால், நாலு வேளைக்கு ஒரு வேளையாவது, "நம் தாயை வேறு யார் கவனிப்பார்கள்?" என்று நினைத்து அவளது மனம் கோணாமல் நடந்து கொள்கிறான். மல மகன்களைப் பெற்ற தாயோ, — பேட்டாப்போட்டியிலே, — யாருடைய கவனிப்பையும் பெறாமல் திண்டாடுகிறாள்! இதைத்தான், "ஒரு பிள்ளை பெற்றவளுக்கு உறியிலே சோறு, நாலு பிள்ளை பெற்றவளுக்கு நடுத்தெருவிலே சோறு" என்று விளக்குகிறது பழமொழி.

## பெண்குழந்தை

சமுதாயத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் கிடைக்கும் மதிப்பில் உள்ள ஏற்றத்தாழ்வு குழந்தைப் பருவத்திலேயே தொடங்கிவிடுகிறது. "ஆணாய்ப் பிறந்தால் அருமை, பெண்ணாய்ப் பிறந்தால் எருமை" என்னும் பழமொழி இதைத் தெளிவாக உணர்த்துகிறது.

ஐந்து பெண் பெற்றால் அரசனும் ஆண்டியாவான் என்னும் பழமொழி, பெண்மக்களுக்குக் குடும்ப வாழ்வு அமைத்துக் கொடுப்பதிலே அவர்களின் பெற்றோர் பட வேண்டிய வேதனையை விளக்குகிறது. பெண்ணுக்குப் பரிசம் கொடுத்து மணந்து கொண்ட பழைய வழக்கம் மாறிச் சீதனம் என்னும் (மாப்பிள்ளை விலை) வழக்கம் சமுதாயத்தில் ஏற்பட்டபின் பெண்களைப் பெற்றவர்கள் தங்கள் சொத்துக்களைக் கூட விற்றுத் தீர வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்த வழக்கம் சமுதாயச் சம்பிரதயமாகி விடவே, பெண்ணின் பெற்றோர்க்கு அதுவே பெரிய சுமையாக, — நிரந்தரச் சுமையாக உருவாகிவிட்டது! இதைத்தான் வைக்கோல் படப்புக்கு (போருக்கு) ஒரு கன்றுக்குட்டி, வாழுகிற வீட்டுக்கு ஒரு பெட்டைக்குட்டி என்னும் பழமொழி சற்றுக் கடுமையான குரலில் எடுத்துரைக்கிறது.

## கன்னிப்பெண்

பெண்மையை வாழ்வின் கனிவுப் பக்கமாகவும் காதலி அல்லது மனைவியாகிய பெண்ணை பெண்மைகளின் கூட்டு

வடிவமாகவும் கண்டு வந்தனர் தமிழர்கள். தொல்காப்பியம், பெண்களுக்கு எப்போதும் இருக்க வேண்டிய மூலங்கள் 'அச்சமும் நாணமும் முதலியவைகளே'[1] என்று கூறுகிறது. அதாவது, பெண் என்பவள் ஒரு மலர்ச்செடி போன்றனள், கரடுமுரடான போக்கு என்னும் காற்று வெயில்கள் அணுகாமல் வளர்க்கப்பட வேண்டியவள் என்னும் ஒரு பொதுவான உணர்வே தமிழ்ச் சமுதாயத்தில் நிலவி வந்திருக்கிறது.

இந்தப் பொதுப்பிரிவு உணர்ச்சியின் ஒரு கிளையே, ஆணுக்கு அவகேடு செய்தாலும் பெண்ணுக்குப் பிழை சொல்லலாகாது என்னும் பழமொழியாக உருவாகியுள்ளது. பெண்ணைப் பற்றிய பிழைச்சொல் (அவச்சொல்) அவளுடைய வாழ்வையே குலைத்து விடுகின்ற ஒரு நிலையை விளக்குகிறது இந்தப் பழமொழி. தமிழ்ச் சமுதாயத்தில் பெண்களுக்கு மட்டுமே வலியுறுத்தப்பட்டு வந்துள்ள கற்புடைமையையும், அது சமுதாயத்தில் கொண்டு செலுத்தப்பட்ட முறையையும் விவரிப்பதாகவும் இது அமைந்துள்ளது. ஒருத்தியின் ஒழுக்கத்தைக் குறை கூறும் வகையிலான சொல் ஒன்று பிறந்து விட்டால், அவளுடைய வாழ்வையே அது பலி கொண்டுவிடுகிறது. அந்தச்சொல் உண்மையானதா, பொய்யானதா என்று ஆராய்ந்து பார்க்கும் மனம் கூட யாருக்கும் இருப்பதில்லை.

சமுதாயத்தின் இந்தக் கொடும் போக்கினால் பாதிக்கப்பட்டுக் கண்ணீர் பரப்பி நின்ற பெண்களின் அவலநிலை கண்டு கசிந்து எழுந்த குரலே இந்தப் பழமொழி. உடற்கற்புக்கு நமது சமுதாயம் தந்து வந்திருக்கின்ற பெரும் முக்கியத்துவத்தால் பல பெண்களின் வாழ்வு கருகிப்போகிறது என்பதையும் இது குறிப்பாக உணர்த்துகிறது.

## மனைவி

"ஆரும் அற்றதே தாரம், ஊரில் ஒருவனே தோழன்" என்பது ஒரு பழமொழி. ஒருவளுக்கு மனைவியாகிவிட்ட பின் அவளுக்கு வேறு சார்புகளே இருக்கக் கூடாது என்பது இதன் பொருள். அதாவது, அவளுக்கு என்று வேறு பாதுகாப்புகள் இருந்துவிட்டால் அவள் தன் கணவனை மதிக்கமாட்டாள் என்னும் எண்ணத்தின் வேற்று உருவம் இது. இன்னும் ஆழமாகச் சிந்தித்தால், இதுவும் ஏற்பாட்டுத் திருமணத்தை உறுதி செய்யும் ஒரு கட்டுத்திட்டமே. கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருசன் என்னும் கொள்-

கையை வலியுறுத்தியவர்கள், திருமணம் என்பதை அன்பின் இணைப்பாகக் கருதவில்லை என்றே கூறலாம். அதிலே பெண்ணின் விருப்பத்திற்கு எந்த இடமும் இல்லாததால், - அவள் மீது திணிக்கப்பட்ட அந்த மனத்தை ஏற்றுக் கொண்டு அவன் அடங்கிக் கிடக்க வேண்டுமானால், - அவளுக்கு அவனைத்தவிர வேறு பற்றுக் கோடுகளே இருக்கக் கூடாது என்று கருதினார்கள். அதனாலே தான்-'இலட்சிய மனைவி, எதற்குமே தன் கணவனைத் தவிர வேறு யாரையும் எதையும் எதிர்பார்க்க இடம் இருக்கக் கூடாது' என்னும் பொருளில் ஆகும் அற்றதே தாரம் என்று வரையறுத்தார்கள்.

'தன் பெண்டாட்டியைத் தான் அடிக்கத் தலையாரி கையில் சீட்டு வாங்க வேண்டுமா?' என்னும் பழமொழி மனைவிக்கு சமுதாயத்திலும், தனிப்பட்ட குடும்பங்களிலும் எத்தகைய மதிப்பு இருந்தது என்பதைக் காட்டுகிறது.

### விதவை

கைம்மை என்பது நமது சமூகத்தில் ஒரு பெருங்கொடுமையாகவே இருந்து வந்துள்ளது நமக்கு எட்டுகிற மிகப்பழைய இலக்கியங்களிலும் இக்கொடுமையின் குரல் கேட்கிறது. கணவனை இழந்த பெண்ணுக்கு மறுமண உரிமை இல்லாததால் விதவைகளின் வாழ்வு முட்படுக்கையாகவே இருந்து வந்தது.

'பெருவளக் கொழுநன் மாய்ந்தெனப் பொழுதுமறுத்து
இன்னா வைகல் உண்ணும்
அல்லிப் படூஉம் புல்லா வினவே'[8]
'கருங்கண் தாக்கலை பெரும்பிறிது உற்றென
கைம்மை உய்யாக் காமர் மாந்தி'[7]

போன்ற செய்திகள் விதவைகளுக்குச் சமுதாயம் விதித்திருந்த கட்டுப்பாடுகளைப் பற்றி எடுத்துக்காட்டுகின்றன.

விதவையானவள் தனியே இருந்து கைப்பாடு பட்டுத் தன் பிள்ளைகளை வளர்த்து ஆளாக்க விரும்பினாலும், சமுதாயம், தனது கொடுஞ்சொல் என்னும் பெரிய கொடுவாளை அவளுடைய மக்களின் வாழ்வுக்கு நேராக நீட்டுகிறது. அவளுடைய பிள்ளைகளை, கைம்பெண்டாட்டி வளர்த்த கழிசிறை, அறுதாலி மகளுக்கு அங்கமெல்லாம் சேட்டை என்றெல்லாம் சமுதாயம் பழித்துக் கூறுகிறது.

**மாமியார் - மருமகள்**

இத்தனை இன்னல்களுக்கு உட்படுத்தப்பட்ட பெண், - மாமியார் மருமகள் என்னும் இரண்டு நிலைகளில் தனக்குத்தானே எதிரியாகி நிற்கும் காட்சிதான் நமது சமுதாயத்தில் பெண்மக்கள் வகித்து வந்த நிலைகளிலே மிகமிகப் பரிதாபத்திற்கு உரியது

மாமியார் மெச்சிய மருமகள் இல்லை, மருமகள் மெச்சிய மாமியார் இல்லை என்னும் பழமொழி அவ்விருவரிடையே நிலவி வந்த உறவின் தன்மையை அப்பட்டமாகச் சித்தரிக்கிறது. மாமியாரும் சாகாளோ மனக்கவலை தீராதோ? மாமியார் உடைத்தால் மண்சட்டி, மருமகள் உடைத்தால் பொன்சட்டி என்று மருமகள் குமுறுவதும், உனக்கு அவள் வாக்கு வேதவாக்கு பெண்டாட்டித் தெய்வமே பெருந்தெய்வம் என்று மாமியார் (தன் மருமகளைப் பற்றி மகனிடம்) கொந்தளிப்பதும் அந்த உறவு மோதலில் சிதறித் தெறித்த உணர்ச்சிப் பொறிகளே.

இந்தச் சண்டையைத் தவிர்க்க முடியாத சமுதாய மூத்தோர்கள், மாமியாரும் மருமகளும் ஒருவர்க்கு ஒருவர் இன்றியமையாதவர்கள் என்று ஆறுதல் உபதேசம் செய்திருக்கிறார்கள் ; அதையும் பழமொழியே நமக்குச் சொல்கிறது. ஆணிக்கு இணங்கின பொன்னும் மாமிக்கு இணங்கின மருமகளும் அருமை என்பது மாமியாருக்குக் கூறப்பட்ட ஆறுதல்மொழி. "கொடும்பாவியானாலும் கொண்ட மாமியார் வேண்டும் ; பெண்ணுக்கு மாமியாரும் பிள்ளைக்கு வாத்தியாரும் :- பொன்னாலே மருமகளானாலும் மண்ணாலே ஒரு மாமியார் வேண்டும், இவை மருமகளுக்கு சொல்லப்பட்ட அறிவுரைகள். ஆயினும் கட்டுக்குடும்ப முறையும் பெண்ணுரிமை மறுப்பும் கட்டிக் காக்கப்பட்ட காலம் வரை, - பெண்கள் கல்வி பெற்று வெளி உலகில் நடமாடத் தொடங்கிய காலம் வரை,- மாமியார் மருமகள் சண்டை இருந்தே வந்தது இன்னமும் இந்தக் குடும்பப்போர் நிகழ்ந்துகொண்டேதான் இருக்கிறது.

முடிவுரை :

சமுதாயத்தில் பெண்களின் நிலையைப் பலவாறு படம் பிடிக்கும் இப்பழமொழிகள் அனைத்தும் ஒரே காலத்தைச் சேர்ந்தவை அல்ல ; சமுதாயத்தில் எல்லாப்பகுதியினரும் இச்சொல்லப்பட்ட விதமாகவே பெண்களை நடத்தினார்கள் என்றும் சொல்வதற்கில்லை. ஆனாலும், ஆண்-பெண் உரிமை நிலையில் ஏற்-

பட்ட மாறுதலையும் விதவைகளின் நிலையையும் பொறுத்த அளவில் நாளுக்கு நாள் நலிவு மிகுந்து வந்திருப்பதாகத் தெரிகிறது. இடைக்காலத்தில் வந்து புகுந்த மாமியார் மருமகள் போராட்டம் இங்கே மிக வலுவாக ஊன்றிக்கொண்டது என்பதும் தெரிகிறது. தமிழ்ச் சமுதாயம் பெண்களுக்குப் போதிய உரிமைகளை வழங்காத சமுதாயமே என்பதைப் பழமொழி மூலமாக அன்றிப் பிற சான்றுகளான எழுத்து, இலக்கியம், சமயம், அரசியல் முதலியவைகளாலும் அறியமுடிகிறது.

---

## பிஜித்தீவில் தமிழர்கள்

இராமேஸ்வரம் கடற்கரையிலிருந்து இருபது கல் தொலைவில் உள்ள ஈழத்தமிழர்களின் அவலம் இன்னும் நீங்கவில்லை. கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேலாகவே அங்கே உள்ள தமிழ் இனம் அழிக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் சென்ற மே மாதம் இரண்டாவது வாரத்தில் பிஜித்தீவிலிருந்து வந்த செய்தியும் மகிழ்ச்சி தருவதாக இல்லை. ஆஸ்திரேலியாவிலிருந்து கிழக்குப் புறமாக ஏறத்தாழ 600 கல் தொலைவில் பசிபிக் கடலில் நிலைகொண்டுள்ள எண்ணூற்றுக்கு மேற்பட்ட தீவுக்கூட்டங்களே பிஜி நாடு ஆகும். 1970-ஆம் ஆண்டு இங்கிலாந்திலிருந்து விடுதலை பெற்ற இந்த வளம் பொருந்திய தீவுகளின் தலைநகர் சுவா என்பதாகும். பிஜித் தீவுகளின் மக்கட் தொகையினர் ஏழே கால் இலட்சம். இவருள் மூன்றரை லட்சம் பேர் இந்தியர். தமிழ்ச் சமுதாயத்தினர் பெரும்பகுதியினராக இருக்கக்கூடும். ஆயிரக்கணக்கான மைல்கள் கடற்பயணத்தில் வெள்ளையரால் கொண்டு செல்லப்பட்டு அங்கேயுள்ள கரும்புத் தோட்டத்தில் இவருடைய முன்னோர்கள் கடுமையாக உழைத்துள்ளனர். மாகவிஞன் பாரதியும் அதனைப் பற்றி 'செக்கு மாடுகள் போல் உழைத் தேங்குகின்றார்' என்று குறிப்பிடுகின்றார். வெள்ளையராட்சிக் காலத்தில் ஆண்களும் பெண்களுமாக அங்கு சென்றோரைப் பற்றி

> ஏழைகள் அங்கு சொரியுங் கண்ணீர் வெறும்
> மண்ணிற் கலந்திடுமோ? — தெற்கு
> மாகடலுக்கு நடுவினிலே, அங்கொர்
> கண்ணற்ற தீவினிலே — தனிக்
> காட்டினிற் பெண்கள் புழங்குகின்றார் — அந்தக்
> கரும்புத்தோட்டத்திலே

என்பதுவும் பாரதியின் கூற்றாகும்.

அண்மையில் ஜனநாயக முறையில் தேர்தல் நடந்து பின்னர் அமைக்கப்பெற்ற அமைச்சரவையில் இருந்த பதினொருவரில் ஏழுபேர் இந்தியராக இருந்தது பிஜி இனத்தைச்சார்ந்த ரபுக்கா என்னும் 39-வயது ராணுவ அதிகாரி ஒருவனுக்குப் பிடிக்கவில்லை, அமைச்சரவைக் கூட்டம் நடந்து கொண்டிருந்தபோதே முகமூடி அணிந்த ராணுவ வீரர்களை அழைத்துச் சென்று அமைச்சர்களைக் கைது செய்து ஆட்சிக் கலைப்பினையும் அறிவித்து விட்டான். இதனைத் தொடர்ந்து இந்திய வமிசாவழியினரின் சொத்துக்கும் உயிருக்கும் பாதுகாப்பற்ற நிலை. இந்திய அரசின் கவனம் உரிய காலத்தில் செலுத்தப்பட வேண்டும்.

மொரிசியஸ், பிஜி, கயானா, தென் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளில் குடியேறியுள்ள இந்தியருள் தமிழரே மிகுதி. எட்டு ஆண்டுகளுக்கு முன் கயானாவின் பிரதமராக இருந்தவர் ஜெட்டி ஜகன். இவரும் இவரது மனைவி ஜேனட் ஜகனும் பல் மருத்துவர்கள். ஜகந்நாத செட்டி என்பதே ஆங்கில முறைப்படி மருவி ஜெட்டி ஜகன் என்று வந்துள்ளது இந்த நாடுகளில் உள்ள தமிழர்கள் அனைவரும் இன்னும் தொன்மையான மதத்தினையும் மரபினையும், பழக்க வழக்கங்களையும் விட்டுவிடவில்லை என்று கூறப்படுகிறது ஆனால், தமிழ்மொழி அவர்களை விட்டுப் போய் விட்டது. விரும்புவோர் தமிழ்மொழியினைக் கற்றுக் கொள்ளட்டும் என்று எளிய தமிழ்ப்பாட நூல்களை தற்போது இந்த வெளி நாடுகளுக்கு அனுப்ப ஏற்பாடு செய்யும் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தினரின் முயற்சி பாராட்டத் தகுந்தது. பிஜித்தீவுகளுக்கு மட்டும் செய்யப்படும் இந்த நல்ல தொண்டு மொரிசியஸ், கயானா, நாடுகளுக்கும் விரிவுபடுத்தப் பெறல் நன்று. தென் ஆப்பிரிக்காவோடு இந்திய நாட்டு உறவு இல்லாத நிலையில் தற்போதைக்கு ஒன்றும் செய்ய இயலாது.

கிழக்கு ஆப்பிரிக்கப் பகுதிகளான கென்யா, உகாண்டா, டான்ஜானியா நாடுகளில் குஜராத்தியரும், இந்திமொழி பேசுவோரும் மிகுதி. எனவே தமிழ்மொழியினைப் பரப்பும் அரிய தொண்டினை கயானா, மொரிசியஸ் நாடுகளுக்கும் செயற்படுத்தும் நன்முயற்சியில் தமிழ்ப்பல்கலைக் கழகம் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டுகிறோம்.

—பொறுப்பாசிரியர்